padippakam

எம்.வி. வெங்கட்ராம் நேர்காணல்

சாரதா

மலர்: 1
இதழ்: 12
விலை: ரூ. 3. 00
பிப்ரவரி 1994

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

எம்.வி.வி.

□

மா. அரங்கநாதன்

படைப்பாளிகள் அடிக்கடி தலையிலே அடி வாங்கிக் கொள்கிறார்கள். அருமையான அடிகளாக இருக்கும். அடி வாங்கிக் கொள்வதற்கு எந்த அனுபவமும் தேவை இல்லை. வலி மட்டும் தெரிந்தால் போதும்.

நாவல்களும், சிறுகதைகளும் நிறைந்த அளவில் எழுதிய எம்.வி.வி., தான் போற்றி வரும் வியாசரால் மட்டுமல்ல, தோடுடைய செவியன் என்ற பிள்ளையாலும் கூட தாக்கப் பட்டிருக்கிறார். அவையெல்லாம் ஒரு குரலாக, திரும்பத் திரும்ப அவரிடமே வந்து படுத்துகிற பாடு பெரிது. அவரது படைப்புகளில் நன்கு தெரியும், திலோத்துமை— புலோமி— நித்யகன்னி என்று எழுதி விட்ட பின்னரும் நிற்காதவை—நன்றி கெட்ட குரல்கள்.

எம்.வி.வி. மணிக் கொடி காலத்தவரா? பிந்தைய வர்க்கமா? என்பது பற்றியெல்லாம் இந்த தலை முறையினருக்கு கவலையுமில்லை. மணிக்கொடி என்றொரு பத்திரிகை இருந்தது. எல்லாவற்றையும் போல அது போனது. சில எழுத்தாளரின் படைப்புகளால் மணிக் கொடி பெருமை பெற்றது—நல்ல எழுத்துக்கள் எப்போதும் தோன்றிக் கொண்டு தாம் இருக்கும் என்றும் சொல்வார்கள்.

எம்.வி.வி. அகாதமி பரிசு வாங்கியதில் எல்லோருக்கும் மகிழ்ச்சிதான். காலங்கடந்து தரப்பட்டது என்று சொல்லும் போதே, அது காதுகளுக்காக மட்டும் தரப்பட்டதல்ல என்றும் சொல்லலாம். தனது படைப்புகளில் சௌராட்டிர மக்களின் அவலம், உழைப்பு இவற்றை அவர் போன்று எழுதியவர் யாருமில்லை என்றும் சொல்லலாம். இதில் முக்கியமாகச் சொல்லப்பட வேண்டியது 'வேள்வித் தீ'.

ஆதிக்கத்திற்குப் பதில் சொல்ல முடியாது. காட்டிற்கு ஓடியோ, மானாக மாறியோ போய் விட்டவள் நித்யகன்னி. (இந்த நித்ய கன்னி கடைசியில் தவம் செய்ய காட்டிற்கு ஓடினாளா? அல்லது தான் மிகவும் நேசித்த கல்யாணி மானாக உருமாறிக் கொண்டாளா? என்ற கேள்வி தானாக எழும்படி அந்த நாவல் அமைந்திருக்கும். இரண்டு வகையிலும் அம்முடிவை எடுத்துக் கொள்ள முடியும். எம்.வி.வி.யின் எண்ணத்திற்கு மாறாக தானாகவே கூட அந்த முடிவு தோன்றியிருக்கலாம்) இப்படிப்பட்ட நித்ய கன்னியும் குளத்தில் வீழ்ந்து தன்னை மாய்த்துக் கொண்ட கவுசலையும் ஒன்று தான். கடைசி நாளில் ஒரு முடிவைக் கைக்கொண்டு வெளிக் காட்டிக் கொள்ளாதவாறே கணவனிடம் சகஜமான சம்பாஷணை நடத்துவது அரிய காட்சி. நாவலின் மிக முக்கியமான கட்டம், நாம் சந்தித்து இராத நிகழ்ச்சிகளும் 'ஓகோ—இப்படியும் நடந்திருக்கும்' என்று எண்ண வைத்து விடுவது கலை.

SOUTH ASIAN BOOKS
S. 44, 3rd FLOOR,
C. C. S. M. COMPLEX
COLOMBO - 11.
SHRI LANKA.
படிப்பகம்

padippakam

வேள்வித் தீயில் தெரிந்த மனிதர்களைக் கண்டால், நித்ய கன்னியில் வேறு வகை மனிதரைக் காண்கிறோம்—ராமாயணக் கதையை கம்பன் சொல்வது போலச் சொல்கிறார்.

காதுகள் நாவலில் அவஸ்தைப்படும் மகாலிங்கத்தை விட அவரது மனைவி நிலைதான் நம்மைத் தொடுகிறது. எழுந்து நிற்க முடியாத அவள், தரையில் ஊர்ந்து சென்று, பெற்ற பிள்ளைகளை அதிகாரம் பண்ணி வேலை வாங்கும் பாங்கு; எங்கு செல்கிறோம் என்ற நினைப்பு இல்லாமல் குழந்தைகளுக்கு உத்தரவு போட்டு விட்டு செல்வது ஒரு தவ நிலைக்கு சமம். அதை ஒரு சகஜ நிலையாக காட்டுவது படைப்பாளியின் அனுபவ முத்திரை.

நல்லது. அப்படியானால், மகாலிங்கத்தின் அவஸ்தை? சூன்யம் என்று ஒரே அடியாகத் தள்ள முடியாது. மறுதலித்து விட முடியாது. கெட்டியாக பிடித்துக் கொண்டு அதைத் தள்ளி விடவும் விருப்பில்லாத ஒரு நிலை. அது இயலாமையாகவும் இருக்கலாம். இது தான் மகாலிங்கம்.

முருகன் என்று சொல்லி விட்டால் தமிழர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்பது உண்மை. ஆனால், 'காதுகள்' நாவலில் 'அவனே கதி' என்ற சங்கதி தன்னையே பார்த்துக் கொள்வது என்ற ரீதியிலேயே இருந்திருக்க வேண்டும். அது சிந்தனை என்னும் குழப்ப நிலைக்கு அப்பால் ஏதுமற்ற அமைதி நிலைக்கு இட்டுச் சென்று இருக்கலாம். ஆனால், இது ஒரு எண்ணம் தான்.

நாவல்கள் எழுதியவர் என்பது தவிர, எம்.வி.வி.யின் சிறுகதைகள் அத்தனை பேசப்பட வில்லை. நாவல், சிறுகதை என்றெல்லாம் பேதம் பாராட்டாது எழுதியவர் அவர். அவரது சிறுகதையில் வித்தியாசமானவற்றை பார்க்க முடிகிறது. சில கு.ப.ரா-வை படிப்பது போல் உள்ளன. எடுத்துக்காட்டாக, பூமத்திய ரேகை.

நல்லவர், கெட்டவர் என்ற ரீதியிலோ, சரியானது தவறானது என்றோ பிரித்துப் பார்ப்பது எந்த விதத்திலும் அந்தக் கதைக்கு நியாயம் வழங்குவது ஆகாது. விஷய அறிவை மட்டும் கொண்டு அலசுகிற விஷயமாக இராது. இலக்கியத்தின் இன்றியமையாத தன்மை அது. எம்.வி.வி. நாவல்களுக்கும் இது பொருந்தும்.

மூக்குத்தி என்ற அவரது சிறுகதை, பின்னாளில் இரண்டு வெவ்வெறு எழுத்தாளரால் பத்திரிகைகளில் எழுதப்பட்டுள்ளது. என்பது ஒரு சுவராஸ்யமான விஷயம். (ஆனால், அவருடைய 'பைத்தியக் காரப் பிள்ளை' என்ற கதையை அவ்வாரெல்லாம் சொல்ல முடியாது.)

எம்.வி.வி. அவர்களின் பாத்திரப் படைப்புகள், அவரது கலா பூர்வத்துக்கு சாட்சிகள். தன்னைச் சுற்றி இருக்கிற அவலத்தையும், வளமையையும் பாத்திரங்கள் மூலமாக வெளிக்கொணர்வது என்பது பெரிய விஷயம். அதை அவர் குறைவு படாது செய்கிறார். ●

படிப்பகம்

padippakam

நாளைய உலகிலும்

★ ஆத்மன்.

இந்த வேகாத வெயில்ல
ஏன் சுத்திக் கொண்டிருக்கிற
என்ற வார்த்தையோடு
அடுப்படிக்குள் இருப்பாள்
அம்மா.

தன் வார் அறுத்து போன
ரப்பர் செருப்பை ஊக்கு மாட்டி
காலில் போட்டு பார்த்துக்
கொண்டிருப்பான் தம்பி.

காய்கறிகள் வாங்க என்று
பை எடுத்துப் போய் மீனும்
வாழை இலையும் வாங்கி
சந்தோசம் முகத்தில் தெரிய
வீதியோரம் வந்து கொண்டிருப்பார்
அப்பா.

இருக்கும் ஒரே மர ஸ்டூலை
ஜன்னலோரமாய் இழுத்து போட்டு
உட்கார்ந்து வெளியெங்கும்
தன் கண்களை படர விட்டுக் கொண்டிருப்பாள்
தங்கை.

சர்க்கரையோ ரவையோ
கடன் வாங்கிப் போக என்று
கையில் டம்ளருடன்
வந்து கொண்டிருப்பாள்
பக்கத்து வீட்டு மாமி.

தன் சிகப்பு நிறத்தாவணியை
ஈரம் உலர்த்த கொடியில்
காயப் போட்டுக் கொண்டிருப்பாள்
அளவான மார்பு உள்ள
அந்த எதிர்த்த பிளாக் பெண்.

வேகமாய் பறந்து வந்து
அந்த தாவணியில்
சிறிது நேரம் உட்கார்ந்து பின்
பறந்து போகும் அந்த
காகத்திற்கும்
எனக்கும்
ஏதேனும் உறவு இருக்குமோ
என்று யோசித்த படியே
பாத்ரூம் போவேன் நான்.

முகத்தைத் துடைக்கத்
துணியை எடுத்துக்
கண்ணாடியைப் பார்த்தேன்
கண்ணாடியைத் துடைத்தபின்
துணியைப் பார்த்தேன்
இப்பொழுது
முகத்தைத் துடைக்கலாமா? வேண்டாமா?

—முத்து. எத்திராசன்

படிப்பகம்

padippakam

ஐரோப்பாவின் புதிய படையெடுப்பு

பெரியார்தாசன்

உலகத்தின் நாடுகளை மேல் நாடுகள், கீழ் நாடுகள் என்று பிரித்த காலம் மலையேறி விட்டது.

இன்று உலகம் வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகள் என்று பிரித்தறியப் படுகிறது.

மார்க்சிய பார்வையில் சொல்வதானால் இது சுரண்டும் நாடுகள், சுரண்டப்படும் நாடுகள் என்றே பொருள்படும்.

சுரண்டும் நாடுகளான வளர்ந்த நாடுகள், தம் சுரண்டலை முழுமைப் படுத்த தங்களுக்குள் 'G7 நாடுகள்' என்றொரு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு வளரும் நாடுகளை தமக்கு அடிபணிய வைக்க எடுத்த முயற்சியின் வெளிப்பாடு தான் டங்கல் அறிக்கை ஏற்பு.

சாராம்சத்தில் இந்த டங்கல் அறிக்கை நம் தமிழ் நாட்டு பழைய பழமொழி ஒன்றின் நவீன வடிவமாகவே தோன்றுகிறது.

''என் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டு வருகிறாய்? உன் வீட்டுக்கு வந்தால் என்ன தருகிறாய்?'' என்பதே அது.

இன்னொரு வகையில் பார்த்தால், வளரும் நாடுகளுக்கு கொஞ்சம் போல் ஊட்டச் சத்து தந்து விட்டு, அவை சற்றே வளர்ந்த பிறகு, இரத்தத்தை முழுமையாய் குடிப்பது. இது தான் டங்கல் அறிக்கையின் திட்டமும் நோக்கமும்.

அட சொல்கிறவன் சொன்னால், கேட்கிறவனுக்கு மதி எங்கே போகிறது?

வளர்ந்த நாடுகளின் இந்த சதி திட்ட ஒப்பந்தத்தில், வளரும் நாடுகளின் ஆட்சியாளர்கள் ஏன் கையெழுத்திடுகிறார்கள்!

எல்லாம் ஒரு நிர்பந்தம் தான். வெகு மக்களிடம் ஓட்டு வாங்கித் தான் இந்த ஆட்சியாளர்கள் ஆட்சிக்கு வருகிறார்கள். ஆனால், அந்த மகா பெரிய ஓட்டுகளை வாங்குவதற்கு ஆகிற மகா மகா செலவுகளை மறைமுகமாக ஏற்பது இந்த சர்வதேச சதி ஸ்தாபனம் தானே. அதற்கு இன்னொரு பெயர் தான் IMF. அதாவது பன்னாடை—மன்னிக்கவும், பன்னாட்டு நிதி நிறுவனம்.

வளரும் நாடுகளில் ஒன்றான நம் புண்ணிய பாரதம், புதிய பொருளாதாரத்தின் உச்சியில் நிற்க வேண்டிய மகோன்னத நோக்கத்தோடு இந்த டங்கல் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளது. இனி ஒரு குறையும் இல்லை. இந்தியா வளர்ந்து விடும்; சராசரி இந்தியன் தளர்ந்து விடுவான்.

இந்திய விவசாயி, எதை விதைக்கலாம் என்பதைக் கூட இனி அவனோ, அவன் மனைவியோ முடிவு கட்டி விட முடியாது. G7 நாடுகள் ஏமாளி நாடுகளுக்கு எந்த விவசாயப் பண்டத்தை கொழுத்த லாபத்தில் விற்க முடியுமோ, அந்த பண்டத்தைத் தான் இனிமேல் நம் குப்பத்து விவசாயிகள் விதைத்தாக வேண்டும்; விளைவித்தாக வேண்டும்.

பூச்சி மருந்து அடிக்க மறந்து விடக் கூடாது. ஆனால், அந்த பூச்சி மருந்தையும் இனி மேல் அவன் மலிவு விலையில் வாங்கி விடவும் முடியாது.

எப்போதோ முன்னமொரு காலத்தில் இந்த பூச்சி

படிப்பகம்

padippakam

மருந்தைக் கண்டு பிடித்தானே, அந்த நாட்டுக்கு ஒவ்வொரு முறையும் 'ராயல்டி' அழுதாக வேண்டும்.

எல்லாம் சரி! விளைந்த பிறகு விலையை நிர்ணயிப்பது யார்? டங்கல் அறிக்கை தெளிவாக சொல்கிறதே—G7 ஒப்பந்த நாடுகள் என்று.

ஆக, விவசாயி இனிமேல் அதிகம் விளைவிப்பான். கூலிக்கு ஆளெல்லாம் வைக்கமுடியாது. G7 நாட்டு டிராக்டர்கள் வந்து கொண்டிருக்கின்றன. விதைப்பது முதல் அறுவடை வரை அனைத்தும் அவை பார்த்துக் கொள்ளும்; நிச்சயம் விளைச்சல் பெருகும். ஆனால், விவசாயியினால் தான் அனுபவிக்க முடியாது.

டிராக்டர்களைக் கொண்டு வந்த கப்பலே விளைச்சலையும் கொண்டு போய் விடும்.
விவசாயம் தான் இப்படி என்றில்லை, மருத்துவப் பொருட்களின் நிலையும் இப்படித் தான். ஆலைத் தொழில்களின் கதியும் இது தான்.

நேரடியாக சொல்லி விட்டது டங்கல் அறிக்கை, ஆலைகளில் ஆட்களை குறைக்க வேண்டும், புதிதாக ஆட்களை சேர்ப்பதைப் பற்றி கனவிலும் நினைக்கக் கூடாது.

இட ஒதுக்கீட்டில் எத்தனை இடங்களை வேண்டுமானாலும் ஒதுக்கிக் கொள்ளலாம். வேலை மட்டும் தந்து விடக் கூடாது. இதை மத்திய அரசு முதல் மாநில அரசுகள் வரை அப்படியே ஒப்புக் கொண்டாயிற்று.

இதன் விளைவாகத் தான் சிக்கன நடவடிக்கை என்ற பேரில் கடந்த 31 டிசம்பரில் தமிழக நிதி அமைச்சர், 'இனி அரசு வேலைகளில் ஆள் சேர்ப்பதில்லை' என்று அறிவித்தார்.

டங்கல் அறிக்கை, இதிலும் ஒரு விதி விலக்குத் தருகிறது. அரசு வேலைகளில் ஆள் சேர்க்கக் கூடாது தான். ஆனால், போலீசிலும், ராணுவத்திலும் நிறைய பேரை சேர்த்தாக வேண்டும். அப்போது தான் போராடுவோரை ஒடுக்க முடியும்.

டிசம்பர் 31-ந் தேதி, தமிழக அரசின் வேலைக்கு ஆள் எடுப்பதில்லை என்ற அறிவிப்பு. ஜனவரி 1-ந் தேதி, எல்லா பத்திரிகைகளிலும் முழு பக்க அறிவிப்பு — போலீஸ் இன்ஸ்பெக்டர் வேலைக்கு ஆள் தேவை!

சும்மா சொல்லக் கூடாது, டங்கல் அறிக்கையை செயல் படுத்துவதில் தமிழக அரசு முந்திக் கொண்டது. இனி, விலைவாசி ஏற்றத்தை எந்தக் கொம்பனாலும் தடுக்க முடியாது. வேலையில்லாத் திண்டாட்டத்தை யாரும் தடுத்து நிறுத்த முடியாது.

சிறு விவசாயிகள் தங்கள் நிலங்களை விற்றேத் தீர வேண்டும்.

டாட்டா, பிர்லாக்களின் பாடு படு கொண்டாட்டம் தான். அவர்களின் தொழிற்சாலைகளுக்கும், பிற நிறுவனங்களுக்கும் நிதி தட்டுப்பாடே வராது. எல்லாவற்றையும் G7 பார்த்துக் கொள்ளும்.

அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம், குறைந்த நபர்களை வைத்துக் கொண்டு, அதிக வேலையை பிடிங்கிக் கொள்ள வேண்டும். ஒழுங்காக மக்களை சுரண்ட வேண்டும். சுரண்டப்பட்ட உபரி மதிப்பில் கணிசமான பகுதியை G7 நாடுகளுக்கு அனுப்பி விட வேண்டும்.

படிப்பகம்

padippakam

சுருக்கமாகச் சொல்லப் போனால், எந்திரங்களைக் கொண்டு வருகிற கப்பல், உற்பத்திப் பொருட்களை ஏற்றிச் செல்லும்.

வ.உ.சி. காலத்து சுதேசி போராட்டம் மீண்டும் நடக்க வேண்டிய கால கட்டம் இது.

டங்கல் அறிக்கையை ஏற்றுக் கொண்டதன் மூலம் பன்னாட்டு சுரண்டலுக்கு நம்மை அடிமைப் படுத்திய இந்த ஆட்சியாளர் களை 'உழைக்கும் மக்கள்' போராட்டத்தின் மூலம் அப்புறப்படுத்த வேண்டிய தருணம் இது.

★ புதுவை இளவேனில்

●

தூரத்தில் சூரியன்
அருகில் வந்தேன்
நானும் நிழலும் குளத்தில்.

●

மௌனமாய்
இருவரும்
அலை பேசிக்கொண்டிருந்தது.

●

படிப்பு முடித்து
இங்கு தான் இருந்தேன்
மனதை காணவில்லை.

●

வந்த பிறகும்
தொடர்ந்தது...
ஒத்தையடி பாதை.

●

பகல் தூக்கம்
உரிமையாய் எழுப்பியது
வாசம் பிடித்த பூனை.

●

வீசிய காற்றில்
வேகமாய் பேசியது அலை
நிசப்தமாய் கண்ணகி.

●

நேற்றுதான் வைத்தேன்
தொட்டித் தோட்டம்
நேசம் பேசியது சிட்டுக்குருவி.

படிப்பகம்

padippakam

திருக்குறள் 'பெண்ணடிமை' போதிக்கிறதா?

★

புதுவை சிவ. இளங்கோ

இது பெண்ணுரிமை பற்றிப் பேசுபவர்களின் 'சீசன்'. பெண்ணடிமை ஆதிகாலந்தொட்டு நடைமுறையில் இருக்கிறதென்பதை நிருபிக்க முனைபவர்கள் அதற்குச் சான்றாக இலக்கியத்தைக் காட்டுகின்றனர். இதில் வேடிக்கை என்னவென்றால், பக்திப் பரவசத்தில் சிவனடியார்க்கு மனைவியைத் தாரை வார்த்ததாகக் கதையளக்கும் புராண, இதிகாசங்களையெல்லாம் விட்டு விட்டு இவர்கள் திருவள்ளுவரை ஒரு பிடிபிடிக்க ஆரம்பித்துவிட்டனர்.

திருக்குறள் தேசியப் பதிப்பில், பெண்கள் குறித்துச் சொல்லப் பட்ட குறள்கள் இடம்பெறக் கூடாது என்கிறார் ராஜம் கிருஷ்ணன், தினமணி சுடரில். பெண்களைக் கேவலப்படுத்துகிறார் திருவள்ளுவர் என்று கண்டுபிடித்து பிரேமா என்பவர் ஒரு நூல் முழுக்கச் சாடுகிறார். இவர்கள் பார்வையில், பெண்களென்றாலே வேசியென்றும், போகப் பொருள்களென்றும் சந்தேக மின்றி நேரடியாகஅடித்துச் சொல்லும்வேதம்முதல் புராணங்கள் வரை அனைத்தையும் அன்போடு அரவணைத்துக் கொள்வார்கள்—கற்புள்ள புதுமைப் பெண்கள்; இல்லத்தை ஆள்பவள் 'இல்லாள்' என்ற பொருள் பொதிந்த சொல்லைக் கொடுத்த வள்ளுவர் கற்பைத் 'திண்மை' என்றால், பெண்ணுரிமை மறுக்கும் வக்கிர புத்திக்காரார்!

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் பெண் கல்வி வேண்டும் என்ற பாரதி புரகாரனென்றால் அதையே இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே கூறிய வள்ளுவர் மட்டும் எப்படி பிற்போக்குவாதியாவார்? காண்பவர் மயங்கும்கண்களையுடைய ஒரு கவர்ச்சிக் கன்னி, கல்வியறிவு அற்றவளாக இருப்பின் அவளுக்குக் கண்களில்லை; புண்கள் என்று சொன்னவள்ளுவர் எந்தச் சமுதாயத்தில் இருந்து வந்தார்? 'காதல்எனினும்கருணைதந்தேன் கட்டிலின் மேலே' என்பது இந்தக் காலத்துப் பாட்டு. அதாவது வரவோடு வரும் பெண்ணை மணந்தால் வாழ்வு தருவதாம். அவள்மூலம் தன்இன்பவெறியை தீர்த்துக் கொண்டு அதையும் 'கருணையால்' செய்தானாம். புரட்சிப் பெண்களே எங்கே போனீர்கள்?

'குளத்தில் முங்கிக் குளிக்கையிலே கோவிந்தன் பெயரைச் சொன்னால்கழுத்திலுள்ள தாலி 'மின்னுது' ராமா ஹரே'—இது கூடப் பரவாயில்லை. 'சேலை திருத்தும்போது அவன்பெயரைச் சீரங்கா என்று சொன்னால் 'அழுத்தமான' சுகம் பிறக்குது கிருஷ்ணா ஹரே'! கோவிந்தனும் சீரங்கனும் பாடுபவளின் 'கணவன்கள்' அல்ல. ஆனால் கிடைப்பதோ 'அழுத்தமான' சுகம், அட இதுதான் போகட்டும் 'ஊருக்கண்ணு உறவுகண்ணு, நாய் கண்ணு, நரிக்கண்ணு, கண்டகண்ணு, முண்டகண்ணு, இதெல்லாம் படாமல் பவனி வந்தாரேசின்னக்கவுண்டர்.மேட்டுக் குடிகளைப் போல் கேட்டுக் களித்த நமது புதுமைப் பெண்களுக்கு 'முன் (ம)டக்கண்ணு' என்றால் பொருள் விளங்காதா என்ன? இதெல்லாம் இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்பா? அல்லது புரட்சிப் பெண்கள் நிறைந்த இன்றைய சமுதாயத்திலா?

படிப்பகம்

padippakam

ஏதோ அந்தக் காலத்தில் 'வரைவின் மகளிர்' இருந்ததால் வள்ளுவர் அப்படி எழுதிவிட்டார். இந்தக் காலத்தில் வரைவின் மகளிருமில்லை, வைப்பாட்டிகளுமில்லை, வேசிகளுமில்லை, தாசிகளுமில்லை என்று வெளியில் சொன்னால் அடிக்க வந்து விடுவார்கள்.

ஜூனியர்விகடனில் எய்ட்ஸ் எரிமலை எழுதிய டாக்டர் ஜெயாஸ்ரீ தரிடம் சென்று இவர்கள் கேட்டுப் பார்க்கட்டும் செக்ஸ் தொழிலாளிகள் சென்னையில் மட்டும் எவ்வளவு என்று? கேட்டு மயக்கம் போடுவதுஇருக்கட்டும். அந்த ஆய்வு முடிவுகளே கூட செக்ஸ் தொழில் நடக்குமிடம் போய் அவர்களைச் சில கேள்விகள் கேட்டு ஆளை எண்ணிக் கொண்டு வந்து விடுவதுதான்.

சமுதாயத்தில் உண்மையாக ஊடுருவிப் பார்த்தால் செக்ஸ் தொழிலாளிகளின் எண்ணிக்கை பிரமிக்க வைத்துவிடும். அடுத்த மாநிலம் போனால் அழுதே விடுவீர்கள். இதைவிட அழவைக்கும் விஷயம் இந்த செக்ஸ் தொழிலாளிகள் எவ்வளவு பங்கோ அந்த அளவிற்கு 'தொழிற்கூடமில்லாது சோரம் போகும் குடும்பப் பெண்களும், விரும்பிப் போகும் மஞ்சள் பழுத்த பத்தினிகளும் சமுதாயத்தில் பிணைந்துள்ளமை என்பதுதான்.

அண்மையில் பல இதழ்களில் வெளியான ''வெளிநாட்டுப் பாலியல் வன்முறைகள்'' பற்றிய கட்டுரையும் நமக்குப் பாடம் தான். கொஞ்சம் புரிந்து கொள்ளுங்கள். ''சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை'' என்ற குறள் மனித இனம் இருக்கிற வரை பொருந்தும் என்று. 'நிறைகாத்தல்', 'நிறையழிதல்' இந்தஇரண்டு சொல்லாட்சிகளே போதும், மனிதகுலம் உய்ந்து விடும்.

புதுமைப் பெண்களுக்கெல்லாம் ஒரு வேண்டுகோள். மாடிகளிலும் குளிர்சாதன அறைகளிலும் கண்ணாடி ரூமிலும் சொகுசாக டேபிள் லைட் போட்டுக் கொண்டு சமுதாயப் பிரச்சனைகளை அலசாதீர்கள். முதலில் மாடியை விட்டு சற்றுக் கீழே இறங்கி வாருங்கள்.

☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ **நன்றி!**

1993-ஆம் ஆண்டில் துவங்கி, வெளியான 30 சிற்றிதழ்களில், தரமான படைப்புகளுடன் தொடர்ச்சியாக வெளிவந்த சிறந்த இதழாக நமது ''சாரதா'' இதழைத் தேர்தெடுத்து பாராட்டுச் சான்றிதழும், பரிசும் வழங்கிய சிற்றிதழ் ஆராய்ச்சியாளர் திரு. பொள்ளாச்சி நசன், 'வார முரசு' ஆசிரியர் திரு. அ. ராஜா சொர்ணசேகர் ஆகியோருக்கு எமது நன்றிகள்.

—ஆசிரியர்

சந்தா விவரம்

தனி இதழ் : ரூ. 2-50

ஆண்டுக்கு : ரூ. 30-00 ஆயுளுக்கு : ரூ. 500-00

படிப்பகம்

padippakam

முன்னொரு நாளில்....

மிருத்யு

உதடுகள் லேசாகி, நாக்குதடித்து பசையற்றுப் போனதாய் பிரம்மை தட்டியது. எப்படியோ மாலைவரை தாக்குப்பிடித்தாயிற்று. இரவு பத்துமணியாகிவிட்டால் வெற்றிகரமான முதல் நாள் நிறைவடையும். நினைக்கும் போதே சந்தோஷமாயிருந்தது, நம்மாலும் முடியுமென்ற கர்வம் மேலோங்கி உற்சாகமூட்டியது.

ரூமைப்பூட்டி, சாவியை ஒட்டிற்கும்வீட்டுச்சுவருக்குமான இடைவெளியில் வைத்துவிட்டு சந்து கடந்து தெப்பக்குளம் நோக்கி நடந்தேன். மார்கழி மாதத்தில் மாலையில்கூட பக்திப்பாடல்கள் ஆங்காங்கே ஒலிக்கத்தான் செய்கின்றன. ''கேட்டவர்க்கு கேட்டபடி வாழ்வு தருகிறான்'' என சீர்காழி, கீதை சொன்ன கண்ணனின் வருகையை முழங்கினார். தெருவோரமாய் வியாதியோடு ஒருவன் முடங்கிக் கிடந்தான். மதுரா ஹோட்டல் சாப்பாடும், ஸ்திரமற்றதனியார் உத்யோகமும், வாடகை ரூமும் நான் கேட்காமலே பெற்றவையே. முன்கூட்டியே திட்டமிட்டு பர்ஸை மெலிதாக்கி எடுத்து வந்தேன். காசு குறைவாக இருப்பதுதான் நல்லது. ஏனெனில் உறுதிமொழிகள் பிசக நிறைய வாய்ப்பும், அதிஉத்திரவாதமுமான இடமாயிற்றே இந்த மார்கெட் பகுதி. முழுதாய் மூன்று ரூபாய் எண்பத்தைந்து காசு. எங்ஙனம் இதைதிருப்திகரமாகவும்முழுமையாகவும் செலவழிக்கலாம் என்கிற யோசிப்பில் தெப்பக்குளம் நெருங்கிவிட்டிருந்தேன்.

அரசு உத்திரவின்படி, குளத்திலுள்ள முதலைகளைப் பிடிக்க முயற்சிகள் நடந்துகொண்டிருந்தன. இரண்டு காலி எண்ணெய் பீப்பாய்களை ஒன்றாகக்கட்டி, நீண்ட மூங்கில் கட்டைகளை துடுப்பாக்கி, படகோட்டிக் கொண்டிருந்தனர் இருவர். குளத்தைச் சுற்றிலுமுள்ள நடைபாதைக் கடைகளுக்கான இடைவெளியில் மக்கள் புகுந்து வேடிக்கை பார்த்தனர், பரபரப்புற்றனர். இத்தனை காலமாய் இந்தக் குளம் சுத்தமாய் இருந்து வருவதே முதலைகள் பற்றிய பயத்தால்தான். பிடிபடக் கூடாது முதலைகள், பின்னர் மாசடைந்து போகும் குளம் மனிதர்களின் போஷாக்கானபோக்குகளால்.

மாலையென்றபடியால் நடைபாதைக் கடைகளில் திண்பண்டங்கள் சுடச்சுட தயாரிக்கப்பட்டு வந்தன. காலையில் இருந்தே பசியில்லை, எனினும் வாய் எதையாவது மென்று அசைபோட எண்ணம்கொண்டது இரண்டு மிளகாய் பஜ்ஜிவாங்கிக் கொண்டு உலாவத் தொடர்ந்தேன். தின்றுகொண்டே நடக்க தயக்கமாய் இருந்தது. யார் பார்த்துவிடப் போகிறார்கள்? பார்த்தாலும் என்ன இப்போது? காகிதம் பிரித்து கடித்தபடி நடந்தேன். ஒரு ரூபாய் தீர்ந்தாயிற்று.

வெங்கு ஊரில் இல்லாதது நல்லதாய் போய் விட்டது. அவன் இருந்திருந்தால்எப்படியும்இன்று தப்பித்திருக்க முடியாது. இந்நேரம் ஒன்றரை பாக்கெட் தீர்ந்திருக்கும். அவன் சொன்னான், ''எந்த நேரத்திலும் என்னால் இந்த பழக்கத்தை விட்டுவிட முடியும். நான் ஒன்றும் தொடர் புகைப்பாளி அல்ல'' என்று. ஆனால் இதுவரை ஒருநாள்கூட நிறுத்த முயற்சித்ததே இல்லை. அதையும் கூட ஒரு நாள் கேட்டு விட்டேன். ''அப்படியே இருக்

படிப்பகம்

padippakam

கட்டுமே ஏன் விடவேண்டும்? தவறென்ன இதில்?'' என்றான்.

அதற்குமேல் இதுபற்றி தொடர விரும்புவதில்லை. தொடர்ந்தால் இன்னும் நிறைய, வீம்புக்கென்று பிடிப்பான். மேலும் இதனால் குறையப் போவது என் பர்ஸின் செழுமை என்பதால் அத்துடன் நிறுத்திக்கொள்வேன். ஆனாலும் என்றாவது ஒருநாள் நாமாவது முயற்சிப்போமென எண்ணிக் கொள்வேன். இப்படிப்பட்ட யோசனையின் பேரில்தான் இன்று முடிவு செய்தேன், நிறுத்தித்தான் பார்ப்போமே என்று. புதுவருடம் துவங்கிய அன்றே திட்டமிட்டதுதான். டிசம்பர் 31 ம் தேதியன்று பலத்த யோசனை இருந்தது. பிறப்பாண்டை புதிதென ஆரம்பிக்க புறப்பட்டு, சபதமேற்குமுன் வெங்குவிடம் ஒரு வார்த்தை கேட்கலாமென எண்ணினேன். அவன் ஓரேடியாய் பயமுறுத்தி விட்டான். ''டேய்! திடீரென நிறுத்துவது ஆபத்தானது. எதையுமே சட்டென்று விட்டுவிடக் கூடாது, பிறகு, முன்னிலும் அதிகமாய் ஆட்பட நேரிடும்'' எனமென்மேலும் தன் முட்டைக் கண்ணை உருட்டியுருட்டி அச்சுறுத்தினான். வெகுவான குழப்பத்தில் சபதமேற்புஉடனடியாய் தள்ளிப்போடப்பட்டது. ஆயினும் உறுத்தாமலில்லை.

நேற்றிரவு அவசர அவசரமாய் பத்துமணி பஸ்ஸில் வெங்கு கோயமுத்தூர் சென்றான், அலுவலக விஷயமாக கடைசியாய் அவனோடு பேருந்துநிலையத்தில் புகைத்ததுதான். காலையில் வேலைக்கு சீக்கிரமே கிளம்பி விட்டேன். வழியில் ஒரு பெட்டிக் கடையில் இருப்பதிலேயே அளவில் பெரிதானவாரப்பத்திரிக்கை ஒன்றை வாங்கி வைத்துக்கொண்டேன். நல்லவேளையாக, இன்றைக்கென்று அலுவலகத்தில் எக்கச்சக்க வேலைகள், உணவு இடைவேளையின் போது சற்றே தலைவலி ஆரம்பித்தது. மதியச் சாப்பாடு முழுவதையும் சாப்பிட முடியவில்லை, பசி அவ்வளவாய் இல்லாததால் உணவு முடித்து வழக்கமான பெட்டிக்கடை வழியே போனால் கவனம் திரும்பிவிடுமென்ற ஐயப்பாட்டில் வேறு வழியில் அலுவலகம் சென்றேன். பின்னர், ஏன் பயப்பட வேண்டும் என்கிற எண்ணம் எழ, திரும்பவும் வெளியே சென்று வெள்ளோட்டமாய்கடைவழியே வந்து சாவதானமாய் அதன் வாசலில் நின்றேன், என்ன ஆகிறது பார்க்கலாம் என்பதாய். கடைக்காரன் எப்போதும் போல் என்னைபார்த்தவுடன், மிட்டாய் பாட்டிலின்மீதுஎனதுபிராண்டை எடுத்து வைத்தான். என்னால் தீர்க்கமாய் தவிர்க்க முடிந்தது. அவன் மெலிதாய் புன்னகைத்தபடி திரும்ப எடுத்துக் கொண்டான்.

மாலை அசதி அதிகமாயிருந்தது தலைவலி வலுத்தது. வழக்கம் போல நடந்து வராமல், பஸ்ஸில் ஏறிருமையடைந்தேன். தலைக்கு குளித்தால் கொஞ்சம் சரிப்படும் என்றெண்ணி, அப்படியே செய்து மாலை உலாவலுக்கென சற்றே தெம்புடன் வெளிவந்தாயிற்று. நேரம் ஆக ஆக தெருவில் கூச்சல் அதிகரித்துக்கொண்டே வந்தது. நெரிசல்களுக்கு மத்தியில், நடைபாதையோரம், ஆரஞ்சுகள் விற்கும் பெண்மணியை மீசைக்கார போக்குவரத்து காவலன் கைத்தடியைக் கொண்டு விரட்டிக் கொண்டிருந்தான். அவளோ, நேரம் கடத்தினால் விலகிவிடுவான் என்கிற நினைப்பிலோ என்னவோ, சாவதானமாய் கையிலிருந்த பழங்களை கூடையில் அடுக்கிவைத்தாள். அதற்குள்

படிப்பகம்

padippakam

சிலர் அங்கே வேடிக்கை பார்க்க கூடிவிட, கோபங் கொண்ட காவலன் தடியால் கூடையை நெட்டித்தள்ளினான். பழங்கள் தரையில் சிதறி உருண்டன. கால்களில் பட்டுவிடாதவாறு பாதசாரிகள் விலகிப் போயினர். அந்த காவலனின் உதடு கருப்பாகவும், புகைப்பவனுக்கே உரித்தான லேசான உதட்டின் மினுமினுப்பும் வழவழப்பும் தெரிந்தது.

கையின் எண்ணெய் பிசுக்கை காகிதத்தில் துடைத்து எறிந்துவிட்டு, நகர்ந்தேன். பேக்கரி இணைந்த காபி ஹவுஸ் மணம் முழுதாய் எனை ஆட்கொண்டது நடைபாதை வியாபாரிகள் காவலனுக்கு பயந்து அல்லது அவ்வாறு காட்டிக் கொண்டு, அவனை திருப்திப்படுத்தும் காரியமாக, தங்களை அப்புறப்படுத்தி கொள்வதில் முனைந்தனர். பர்ஸிலிருந்த சில்லறைகளை சட்டைப் பையில் போட்டுக்கொண்டு காபி அருந்த நுழைந்தேன். ஆர்டர் சொல்லிவிட்டு, பக்கத்து மேசையை நோட்டம் விட்டேன் தடித்த ஆசாமி ஒருவன், தான் கடித்த சமோஸாவை அசை போடுவதை எதோ யோசித்தபடியே நிறுத்தினான். மெல்ல வாயில் விரல் விட்டு, தலைமயிர் ஒன்றை உருவி எடுத்தான், புகைக்கவில்லையா என்று கேட்பது போலிருந்தது, அவன் உருவிய விதம். முறுவல் வலுப்பதற்குள் காபி வந்தது, கூடவே பில்லுடன் வாழ்க்கையின் வேகம் புரிந்தது! ஒரு ரூபாய் பத்து பைசா கையிருப்போடு வெளியே வந்தபோது இருட்டத் துவங்கி விட்டது, தெம்பக்குளம் கருப்பாய் மினுமினுத்தது!

தெருவின் நெரிசலில் எரிச்சல் மூளும் பயம் என்னுள் தலை காட்டியது. இரவு சாப்பாடு முடிக்கும் வரை புத்தி பேதலிக்காமல் இருக்க வேண்டும். ரூமை நோக்கி கால்கள் சென்றன. இடப்பக்கம் கிறிஸ்து ஆலயம். மிகச்சிறியது தான் ஆனால் வாசல் கேட்டும், இருபக்க சுவர்களும் கோட்டைப்புற தோரணையை எடுத்துக்காட்டுவதாய் இருந்தன. மலைக்கோட்டை எதிரில் இருப்பதால், அதற்கீடாய் தன்னை வலியுறுத்திக் கொள்ள இட்டு நிரப்புவது போலிருந்தது, அதன் தோற்றம். சுவரில் நிறைய பைபிள் வாசகங்கள் ''வருந்தி பாரம் சுமப்பவர்களே, என்னிடம் வாருங்கள்'' என்றது ஒரு வாக்கியம். நான் படிப்பதை வேறு மாதிரி புரிந்து கொண்ட காய்கறி விற்பவள், தராசில் நிறுத்த முள்ளங்கியை எதிரே நீக்கப்பட்ட கூடையில் கொட்டியவாறே என்னை ஏறிட்டுப் பார்த்தாள். நான் பூட்டியிருந்த ஆலயக் கேட்டை ஒருமுறை ஆட்டிப் பார்த்து விட்டு இடம்பெயர்ந்தேன்.

சே! இப்பழக்கத்தை விடும் பிரயத்தனம் எத்தனை எரிச்சலூட்டுவது! வெங்கு உடன் இல்லாததும் இப்போது சற்று இழப்பாய் உணர முடிந்தது. காலத்தை சிரமமின்றி கழிக்க அவனே சரியானவன். என்ன செய்வது? சீக்கரமே ரூமை அடைந்து விட வேண்டும்.

நல்லெண்ணங்களை வளர்க்கும் விஷயங்களில் நாட்டம் செலுத்தினால் புத்தி ஸ்திரப்படும் என்கிற நம்பிக்கையில் வலப் பக்கம் வீற்றிருந்த நாக்நாத ஸ்வாமி கோவிலுக்குள் சரணடைய சாலையைக் கடந்தேன். பின்னால் பார்க்காமல் திரும்ப. பின்தொடர்ந்துவந்த ஒருதாடிக்காரர் மேல் மோதிக் கொண்டேன். அவரின் வாயிலிருந்த புகையின் நெடி தன் பிராண்ணை உணர்த்தியது.

படிப்பகம்

padippakam

நுழைவாயிலில் காவியணிந்த ஒரு பெரியவர், கையில் பெரிய வெண்சங்கோடு உட்கார்ந்திருந்தார். மீதமுள்ள சில்லறைகளை அவரிடம் கொடுத்துவிடலாமா என்று தோன்றியது. கோவிலுக்குள்தானே செல்கிறோம் திரும்பிப்போகும்போது தந்துவிடலாம் என்றமுடிவோடு உள்ளே நுழைந்தேன். செருப்பை சுதவோரம், நந்திக்கு வலப்புறமாய் கழட்டி விட்டு போவது வழக்கம். காசை கரைக்க வேண்டுமே. நல்ல பிள்ளையாக கற்பூரம் விற்பவனிடம் செருப்பை விட்டுவிட்டு பிரகாரத்தை அடைந்தேன்.

ஓரமாய் ஒரு சிறுவன் வாழை இலையில் கட்டிய வில்வ இலைகளை விற்றுக்கொண்டிருந்தான். கட்டி, பலகையில் அடுக்கப்பட்ட விதம், பாக்கெட்டுகளை நினைவுறுத்தின. என்றைக்குமில்லாமல் இன்றைக்கென்று இப்படியெல்லாம் உதிக்கிறது!

கற்பகிருகத்தில்ஸ்லோகஸ்தோத்திரங்கள் காதில் விழுந்தன. திருக்கல்யாண மண்டபம் வெறிச்சென்றிருந்தது. மலைக்கோட்டை வாயிற்புற விளம்பரப் பலகையில் புகைத்தபடி இருக்கும் அவன் முதுகில்சாய்ந்தபடி புன்னகைத்து நிற்கும் அவள் ஞாபகம் வந்தது. மண்டபத்தின் பின்புறமாய் பாத்திரங்கள் உருளும் சப்தம் கேட்டது. ஹோட்டல் போலும். கோவிலைச் சுற்றிலும் கடைகளாயிற்றே. மெல்ல நகர, பாதங்களில் ஏதோ பிசுபிசுத்தது வெளவால்களின் கழிவு வாடை நாசியை உறுத்தியது.

பிரகாரம் சுற்றி முடித்து, தரிசனம் கண்டு வெளிவந்தேன். அந்த காவிப் பெரியவரைக் காணவில்லை. செருப்புக்கு நாலணா கொடுத்துவிட்டு தெருவை அடைந்தேன். மண்டைக்குள் ஏகப்பட்ட குடைச்சலாய் இருந்தது. இன்னும் நூறடி நடந்து இடப்பக்கம் திரும்பினால் ரூம்வந்துவிடும். சட்டைப் பையில் சில்லறைகள் லேசாக சிணுங்கின. ரூமை நெருங்கி விட்டேன். சந்தில் திரும்பாமல் நேராகப் போனால் அந்தப் பெட்டிக் கடை. தலைவலி மீண்டும் வந்தது; தன் இருப்பை உணர்த்தியது. ரிக்ஷா ஒன்று இரைச்சலுடன் மணியடித்துப் போக எரிச்சல் ஏற்பட்டது. சண்டையிட்டுவிடுவேனோஎன்று எனக்குள்ளேயே சந்தேகம் மூண்டது. பதற்றமேற்பட்டது. கடையை நோக்கி கால்கள் போயின, மிச்சக்காசில் பாக்கு வாங்கிப் போடலாமென்று.

★

வயிற்றில் பசி கிளம்பியது. பாக்கு வாய் பூராவும் மணந்தது. மீதமிருந்த சில்லறைகளை கோவில் உண்டியலில் போட்டிருக்கலாம். இப்போது யோசித்து என்ன பயன்? பாக்கு போடலாமென்று தான் போனேன். அதுவரையில் நான் நினைத்தே பார்க்கவில்லை இப்படி நடக்குமென்று.

இந்த மாதிரி வேளைகளில் பெட்டிக்கடைக்கு சென்றால், வெறும் பாக்கோடு வரமுடிவதில்லை. இன்னொரு நாள் முயற்சிப்பேன். ஆனால் வெங்குவிடம் இதுபற்றி எதுவுமே சொல்லப் போவதில்லை. ★

உண்ட களைப்பில்
'பர்த்டே' பேபி;
எச்சல் தொட்டியில்
நாய்கள்
குழந்தைகள்!

□ புகழேந்தி

படிப்பகம்

padippakam

அவளைப் பற்றியும் அவனைப் பற்றியும்

☆

என்.ஆர்.தாசன்.

பொதுவாக, மனிதர்கள் சக மனிதர்களிடம் அன்பும் அனுதாபமும் கொண்டவர்களாக நடந்து கொள்வதில்லை. அடுத்தவரின் இழப்புகளுக்காக இரங்குவதை விட, அதற்காக அவரை ஏளனம் செய்தும் கேலி பேசியும் மகிழ்கிற போக்கே சமூக மனிதர்களிடம் சகஜமாகக் காணப்படுகிறது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் மனவேதனைக்கும் பல விதமான உணர்ச்சிக் குமைதலுக்கும் உள்ளாகி, விரக்தியின் எல்லைக்குள் தள்ளப்படுவது இயல்பாகிறது. உரிய நேரத்தில், உரிய முறையில், அவர்களுக்கு அன்பும் ஆதரவும் காட்டப்படுமானால், பாதிக்கப்பட்டவர்கள் அமைதி அடையவும், வாழ்க்கையில் புது மலர்ச்சி பெறவும் சாத்தியப்படும்.

இந்த வாழ்க்கை உண்மையை ஆதாரமாகக் கொண்டு, என்.ஆர். தாசன் அழகான நாவல் ஒன்றை படைத்திருக்கிறார், 'அவளைப் பற்றியும், அவனைப் பற்றியும்' என்ற பெயரில்.

ஒருவனுக்கு திருமணம் நிகழ இருக்கிறது. முகூர்த்த வேளையில், மணப்பெண் ஓடிப் போய் விட்டாள் என்ற தகவல் அதிர்ச்சி தருகிறது. மணமகனிடம் மற்றவர்கள் அனுதாபம் காட்டவில்லை. பலரும் பலவிதமாக அவனைப் பழித்தும் பரிகசித்தும் சந்தோஷப்படுகிறார்கள் அவனை அறிந்தவர்கள், உறவுக்காரர்கள், அலுவலக அன்பர்கள், அவனோடு பழக நேர்கிறவர்கள், உண்மையை அறிய நேர்கிற புதிய மனிதர்கள்— இப்படி எல்லோருமே அவனைக் குறை கூறியும் கேலி செய்தும் களிப்படைகிறார்கள். அவன் செய்யாததொரு தவறுக்காக, வாழ்க்கையின் பல திசைகளிலும் அவன் தண்டிக்கப்படுவது போன்ற உணர்வுடன் அமைதியற்று அலைகிற அவனுக்கு ஒரே ஆசை—அந்தப் பெண்ணை என்றாவது ஒரு நாள், எங்காவது சந்திக்க நேரிடும்; அப்போது அவளிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும், 'என்னை பார்த்தே அறியாத நீ, என்னிடம் என்ன குறைகண்டு, திருமண நேரத்தில் ஓடிப் போனாய்? எதற்காக என் வாழ்வை நாசப்படுத்தினாய்?'

ஓடிப் போன அந்தப் பெண் சுகப்படவுமில்லை. அவளுடைய கதை, காதல் என்று ஏமாந்து அயோக்கியனை நம்பி அவனோடு சென்று, பின் வஞ்சிக்கப் பட்டு அவதியுறும் அபலைப் பெண்ணின் கதை தான்.

இருவரும், கசப்பான, வேதனையும் விரக்தியும் நிறைந்த அனுபவங்களுக்கு பிறகு சந்திக்கிறார்கள்; ஒருவரை ஒருவர் புரிந்து கொள்கிறார்கள். அதற்கு, அன்பு உள்ளமும் பரோபகார இயல்பும் கொண்ட ஒரு மூதாட்டியின் நற்செயல்கள் உதவுகின்றன.

இந்நாவலை வெறும் சம்பவக் கோவைகளாக என்.ஆர்.தாசன் எழுதவில்லை. அவரே குறிப்பிட்டிருப்பது போல, 'சம்பவக் குவியலின் மீது இந்த நாவலை

படிப்பகம்

padippakam

நிறுத்தாமல், சம்பவங்களைச் சார்ந்து எழும் நினைவுகளிலும், மனசஞ்சாரங்களிலும், நிறுத்தி, அதற்கு ஒரு தனித்துவம் சேர்த்திருக்கிறார்.

வாழ்க்கையின் முக்கிய கட்டத்தில் பேரிழப்புக்கு ஆளாகி, மற்றவர்களின் பரிகசிப்புகளையும் பழி கூறல்களையும் ஏற்று அவதியுறும் அப்பாவி மனிதனின் அனுபவங்களும் உணர்ச்சிப் போராட்டங்களும், மனவேதனைகளும் நினைவோட்டங்களும் இந் நாவலில் திறமையாக சித்திரிக்கப்பட்டிருக்கின்றன.

அந்தப் பெண், தான் ஒருவனுக்கு இழைத்து விட்ட தீங்கையும், அதனால் அவன் வாழ்வே பாழாகிப் போனதையும் அறிந்து குமையும் மன நிலையும், அவளது தீர்மானமும், இருவரது முடிவும், அழகாகவும் உணர்ச்சிகரமாகவும் எழுதப்பட்டுள்ளன, இறுதிப் பகுதியில்.

மனித இயல்புகளையும் மனப் போக்குகளையும் புரிந்து கொள்வதற்குத் துணை புரியக் கூடிய நல்ல நாவல்களில் இதுவும் ஒன்று.

வெளியீடு :
பத்மா பதிப்பகம்,
53, என்.ஜி.ஓ. காலனி,
குரோம்பேட்டை,
சென்னை-600 044.
விலை : ரூ.35

—வல்லிக்கண்ணன்

'நூல் இன்பம்' பகுதிக்கு
இரண்டு பிரதிகள்
அனுப்பி வைக்கவும்.

☆கவிதைத் தென்றல்

பொ. இல. பொன்னுசாமி

பக்கம் : 136,
விலை ரூ. 16
வெளியீடு :
மகரந்தம்
17/9, பீட்டர்சாலை, குடியிருப்பு
இராயப்பேட்டை,
சென்னை-600 014.

இந்திய ஆட்சிப் பணியில் அதிகாரியாகப் பணியாற்றி, மிகச் சிறந்த நேர்மையான நிர்வாகி எனப் போற்றப்பட்டவர் டாக்டர் பொ.இல.பொன்னுசாமி. தனக்குக் கிடைத்த ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் பயன்படுத்தி, அவ்வப்போது புனைந்த-பல்வேறு இதழ்களில் வெளி வந்த தம் கவிதைகளைத் தொகுத்து நூலாக்கியுள்ளார்.

செந்தமிழ் மாண்பு, சிந்தனைச் சிலிர்ப்பு, இயற்கையின் சிரிப்பு, காதல் களிப்பு, சான்றோர் சிறப்பு, தத்துவ விழிப்பு, தேசிய மதிப்பு என்ற தலைப்புகளில் தம் கவிதையை வகைப்படுத்தி-வரிசைப்படுத்தி எழுபத்து ஐந்து கவிதைகளை வழங்கியுள்ளார்.

இஃதன்னியில் 'அந்த ஒரு நிமிடம்' என்னும் தலைப்பில் வட மொழிக் காவியமான 'பில்கணிய'த்தின் ஆங்கில மொழிக் கவிதையின் தமிழாக்கமும், பாரதிதாசன் பாடிய 'கொட்டு முரசே' என்ற பாடலின் ஆங்கில மொழியாக்கமும் நூலில் இடம் பெற்றுள்ளன.

'பொன்னுசாமி பல காலம் தவமிருந்து பெற்றெடுத்த செல்வம் தான் கவிதைத் தென்றல்' என உவமைக் கவிஞர் சுரதாவின் பாராட்டும், உலகத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனர் டாக்டர். வி.ஜி. சந்தோஷம் அவர்களின்

படிப்பகம்

padippakam

அணிந்துரையும் பெற்று இந்நூல் பொலிகிறது.

கவிஞரின் கவிதை ஆற்றலுக்கு ஒரு சில சான்றுகள். இசைக் கவிதைகளையும், மரபுக் கவிதைகளையும் பெற்றுள்ள இந்நூலில் புதுக்கவிதையும் உண்டு! 'புன்னகை பூக்கும் புதுக் கவிதை' என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ள போதி மரக் கவிதை, புத்தரின் மனஆற்றலை வெளிப்படுத்துகிறது.

''போதி மரத்தடியில்
சித்தார்த்தன்;
அவனுக்குப்
புத்தி வந்தது.
ஒரு பேதையும் போயமர்ந்தான்
பாவம்! அவனுக்குத்
தூக்கந்தான் வந்தது!

குப்பை நமக்குப் பயன்படும் செய்தியை 'குப்பையில் செல்வம்' என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ள கவிதை விளக்குகிறது. இதே போல் மூங்கிலின் சுயசரிதை, செங்கல் பிறந்த கதை, உப்பு என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ள கவிதைகளும் பல அரிய செய்திகளை நமக்குக் கவிதை வடிவியிலேயே வழங்குகின்றன.

புறாவினை காதல் தூதாகப் பயன்படுத்தாமல் உலகச் சமாதானத்தையும், உலக ஒருமைப்பாட்டையும் வளர்க்கும் தூதாகப் பயன்படுத்தும் ஆசிரியரின் சிந்தனை போற்றுதலுக்குரியது. உழைத்து உழைத்து அதனால் உலகை உயர்த்தி உயர்ந்த மனிதர்களின் சிறப்பினை 'உழைப்பவர் உலகம்' கவிதை எடுத்துரைக்கிறது.

பல்துறைக் களஞ்சியமாய் விளங்கும் இந்நூல் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு மேலும் ஒரு சிறப்பினை நல்குகிறது என்பது நமக்குப் பெருமை தானே!

—பெ.கி. பிரபாகரன்.

★ நான் எய்த அம்பு

★ செந்தமிழினியன்

விளையாட்டாகத் தான்
கேட்டான் என்னிடம்
பதில் கூற முடியாமல்
நொறுங்கிப் போனேன்!

ஆறு அகவையில்
அவனுக்கெப்படி தெரியும்?
அச் சொல்லின் பொருளுக்கு
எத்தனை ஆழமென்று!

''நீ எப்போ சாவாய்?'' என
சினத்தின் மதி கெட்டு
என் தாயை தேளாக
கொட்டிய நஞ்சு வார்த்தை!

அன்று நானெய்த அம்பு
மீண்டும் வந்தென்னை
இடியமாய் தாக்குகின்றது
இன்று மகனுருவில்!

படிப்பகம்

padippakam

பிரபஞ்சன் நேர்காணல்: சில கடிதங்கள்!

அசோகமித்திரன்

''எதிர்க் கட்சிகளில் எது மாற்று அரசு அமைக்கக் கூடியதாகத் தங்களுக்குத் தோன்றுகிறது?'' ஆகஸ்டு சுதந்திர தின இதழுக்காக 'ஹிந்து' பத்திரிகை என்னிடம் கேட்ட நான்கு கேள்விகளில் இது மூன்றாவது. நேரடியான கேள்விக்கு நேரடியான பதில்: ''இப்போதுள்ள எதிர்க் கட்சிகளில் பி.ஜே.பி.ஒன்றுதான் அதற்கான உறுதியும் கட்டுப்பாடும் கொண்டதாகத் தோன்றுகிறது.'' (of the Opposition Parties, the BJP alone Seems to have the will and dicipline to take charge of the govt.)

நான் பி.ஜே.பி. பற்றி எழுதியது இந்த ஒரு வரிதான். இதை வைத்து பிரபஞ்சனும் அவர் கோஷ்டியாரும் எப்படியெல்லாம் ஆடி விட்டார்கள்!

'பணக்காரனே பார்ப்பான், பார்ப்பானே பணக்காரன்' என்பது ஹிட்லர், யூதர் பற்றி எழுப்பிய கோஷம் போலவேயுள்ளது. பிரபஞ்சனின் முதல் நூலுக்கு அவர் வற்புறுத்தலுக்கு இணங்க முன்னுரை எழுதியது நான்தான் ''ஒரு ஊரில் ரெண்டு பேர்'' முதற் பதிப்பு. ஒரு சிறுகதைத் தொகுப்புக்கு நான் எழுதிய முதல் முன்னுரை அதுவே. அதன் மூலம் பிரபஞ்சனே முதல் சோகபுத்திரனாகிறார்.

தி.க.சி.

பிரபஞ்சன் நேர்காணல் மிகச் சிறப்பாக உள்ளது. அவரது மனந்திறந்த கருத்துக்கள், சமூக நீதியையும் முன்னேற்றத்தையும் அடிப்படையாகக் கொண்டவை. எனவே, வரவேற்கத் தக்கவை. எழுத்தாளனுக்குக் கலை பற்றிய பொறுப்பு மட்டுமின்றி, ஆழ்ந்த சமுதாயப் பொறுப்பும் உண்டு என்று இடையறாது அவர் வலியுறுத்தி வருவதும், அதன்படி செயலாற்றுவதும் பெரிதும் பாராட்டத் தக்கதாகும். 'சாகித்ய அகாதமி' பரிசு பெற்றுள்ள எம்.வி.வி. பற்றி அவர் கூறியுள்ளது அவரது பெருந்தன்மைக்கு ஓர் சிறந்த எடுத்துக் காட்டு.

வல்லிக்கண்ணன்

பிரபஞ்சன் பேட்டிதான் ஜனவரி இதழின் பெரும் சிறப்பாக விளங்குகிறது. அவர் தனது கருத்துக்களை வெளிப்படையாகவும் அழுத்தமாகவும் தெரிவித்திருக்கிறார்.

கருவை வேணு

ஒரு எழுத்தாளன் எப்படி உருவாகிறான்; எப்படி கருத்துக்களை தருகிறான்; எப்படி அவன் சோர்ந்து போகிறான்; ஏன் அவன் புறக்கணிக்கப் படுகிறான் எப்படி அவன் உயரே தூக்கி விடப் படுகிறான்; அப்புறம் கீழே தள்ளப்படுகிறான்... இவைகள் தன் வாழ்நாளில் எதிர்பட்டதின் தாக்கம்தான் பிரபஞ்சன் நேர்காணல்.

வா.மு. கோமு

யார் யாரோ எவ்விதமோ பிரபஞ்சனை பேட்டி என கண்டிருந்தும், இப்படி ரசிக்கும் விதமாய்...!

இரா. காமராசு

பிரபஞ்சன் பேட்டி முழுமையான தாக இருக்கிறது.

படிப்பகம்

padippakam

தாசனுக்கு அஞ்சலி

எதுவும்
எழுத வேண்டாம்;
நான் என்ன
சாதித்து விட்டேன்?
சமாதிக்கல் என்ன
விளம்பரப் பலகையா?
ஏதேனும்
எழுத விரும்பினால்
என் குறையை எழுதுங்கள்
அது பிறருக்கு
சிவப்பு விளக்காகும்!
இதை எழுதுகிறீர்களா?
''உன்னை
அறிய முயன்றவன்
தன்னை
அறிய தவறியவன்!''

★

பம்பரம்
ஆடி முடிந்த பின்னே
தலை சுற்றி விழுந்தது!
மலர் பூத்து
மணம் பரப்பிய பின்னே
சருகாகி உதிர்ந்தது!
பழம்
திரண்டு கனிந்த பின்னே
அழுகிப் போயிற்று.
இந்த வாழ்க்கை மட்டும்
வட்டத்தைச் சுற்றி வருமுன்
வழுக்கி விழுவதேன்?

என்.ஆர். தாசன்
மறைவு : 28-01-1994

அமலன்ஸ்டேன்லி இரு கவிதைகள்

1

அறுத்துக் கொள்ளாதே
அதோ
அந்த வெளிச்சம்

மெல்ல மெல்ல
நெருங்குகிறது.

மென்மேலும்
பிரகாசமடைகிறது.

நெடுஞ்சாலையோர
முட்புதர்களே,
சகித்துக் கொள்கிறேன்.

உங்களின் ஹிம்சை
இன்னும் சில
நிமிடங்களே!

2

போன அறுப்புக்கு
கண்ணாடி கிடைத்தது.

தார் ரோட்டில்
காய வைக்க பரப்பியதை
தின்னவரும் பட்சிகளை

ஓரளவிற்கு
அடையாளங்காண முடிகிறது

ஓடைப்பால கட்டைச்சுவரில்
ஒருக்களித்தபடி தினமும்....

காலையில் பார்த்த
மந்தைகள்
கடந்துபோகின்றன.

கூட்டிக் குவித்து
கட்டியெடுக்க
மகன் வருவான்

அடுத்த சாகுபடி
எப்படி நடக்குமோ!

காடு சேர்க்கவே
சரியாகிவிடும் போல;
இந்த வருட
நெல் விற்கும் காசு.

படிப்பகம்

padippakam

எம்.வி. வெங்கட்ராம் நேர்காணல்

● உங்களுக்கு சாகித்ய அகாதமி விருது காலம் கடந்து கொடுக்கப்பட்டதாக பொதுவான இலக்கிய அபிப்ராயம் இருக்கிறது. அதைப் பற்றிய உங்கள் அபிப்ராயம் என்ன?

○ காலம் கடந்து என்று கூறுவதில் அர்த்தமே இல்லை. பெரும்பாலும், க.நா.சு-வுக்கு 80 வயதுக்கு மேல் கொடுத்தார்கள். வல்லிக்கண்ணனுக்கு கிட்டத்தட்ட 70 வயது ஆகும் போது கொடுத்தார்கள். ஜானகிராமனுக்குச் சற்று முன்னதாகவே—அதுவும் அறுபது வயதுக்குப் பிறகுதான் கொடுத்ததாக நினைக்கிறேன். அழகிரிசாமிக்கு அவர் இறந்த பிறகுதான் கொடுத்தார்கள். ஆக, இளம் எழுத்தாளர்களுக்கு கொடுக்கப்பட்டது ரொம்ப கம்மியாகத்தான் தெரிகிறது. எழில் முதல்வன் போன்ற சில இளைஞர்களுக்கும் வழங்கி இருக்கலாம். இந்த நிலையில், கடைசி காலத்திலாவது சந்தோசமாக இருக்கட்டும் என்கிற நல்ல எண்ணத்தோடு எனக்கும் கொடுத்திருக்கலாம்.

● உங்களுக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்பே விருது பெறுவதற்கான தகுதி இருந்த போதிலும், இதுகாலம் வரை நீங்கள் ஒதுக்கப்பட்டிருந்தீர்கள் என்பதை உணர்கிறீர்களா?

○ நல்ல கேள்விதான்! இதற்கு அகாதமிகாரர்களை எப்படி குறை சொல்ல முடியும்? தமிழ் நாட்டில் ஏராளமான இளம் எழுத்தாளர்கள், நல்ல எழுத்தாளர்கள் விருதுக்குத்தகுதியானவர்கள் எழுதஆரம்பித்துவிட்டார்கள். அப்படிப் பார்க்கும் போது, என் பெயர் பழைய பெயராகிவிட்டது. ஓரளவு மறந்து வருகிற நிலுசிலும் இருக்கிறது. நான் இப்போது அடிக்கடி எழுதுவதில்லை. இப்போது நடைமுறையில் எழுதுபவர்களின் பெயர்கள்தான் சட்டென்று ஞாபகத்துக்கு வரும். அவர்களுக்கு கொடுக்கலாம் என்று தோன்றி இருக்கலாம் அல்லவா?

பரிசும், விருதும் இப்போது எனக்குக் கொடுத்து கௌரவிப்பவர்களை நான் குறை சொல்லி இழிவுபடுத்த விரும்பவில்லை.

ஆனால், 25 ஆண்டுகளுக்கு முன்பு, எனக்கு சாகித்ய அகாதமி விருது கொடுப்பதாக அந்த அமைப்பில் உள்ள ஒருவரே தகவல் அனுப்பினார். நான் எதிர்பார்க்கவே இல்லை. ஏனென்றால், நானாக இது வரையில் எந்த விருதுக்காகவும், பரிசுக்காகவும் நான் எழுதிய புத்தகங்களை அனுப்பியதே கிடையாது. அப்போது சென்னையில் இருந்த எனக்கு கும்பகோணத்தில் இருந்து, "இந்த வருட சாகித்ய அகாதமி விருது உங்களுக்குத்தான். உங்கள் 'அரும்பு' நாவலுக்கு" என்று கடிதம் வந்தது. யாரோ நண்பர்கள் அகாதமிக்கு புத்தகத்தை அனுப்பி இருக்கிறார்கள். புத்தகம் கிடைத்திருக்கிறது, படித்திருக்கிறார்கள்; அரும்பு

படிப்பகம்

padippakam

நாவலுக்குத் தான் விருது கொடுக்க வேண்டும் என்று பேசிக் கொண்டும் இருந்திருக்கிறார்கள். இதைச் சொல்லி அனுப்பியவர் ஜஸ்டிஸ் மகாராஜா என்கிற நம்பகமான மனிதர்.

ஆனால், ஒரே வாரத்தில் மாறி விட்டது. எப்படி மாறியது என்பதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும்? அதற்காக, அவர்களைக் குறை சொல்வதில் என்ன இருக்கிறது? பரிசு கொடுப்பது என்ன முறை? யாராவது Sponser பண்ண வேண்டுமா? நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஏதோ குறை கூறிப் பேசுகிறார்கள். அதிலே நியாயம் இருக்கலாம். சரியான நடைமுறை என்ன வென்று எனக்குத் தெரியாது.

இப்போது கூட, விருது கொடுப்பதாக இருந்த விஷயமே எனக்குத் தெரியாது. ஏழே கால் மணிக்கு ஒருவரோடு பேசிக் கொண்டிருந்தேன். எதிர் வீட்டுப் பையன் ஓடி வந்து ''நீங்கள் 'காதுகள்' என்கிற நாவலை எழுதியிருக்கிறீர்களாமே?'' என்றான். ''ஆமாம் அதற்கு என்ன?'' என்றேன். ''அதற்கு அகாதமி விருது கொடுக்கப் போவதாக ரேடியோவில் சொன்னார்கள்'' என்றான். நான் நம்பவில்லை. ஏனென்றால், நம்பி ஏமாந்த அனுபவம் இருக்கிறது. எட்டரை மணிக்கு டி.வி செய்தியில் சொன்னார்கள். அப்போது தான் எனக்கு சரிதான், உண்மைதான் என்கிறநம்பிக்கை உண்டாயிற்று.

ஆனால், இப்போதுகூட எனக்கு விருது கொடுக்க வேண்டும் என்கிற தேவை இல்லையே! எப்போதுமே, அவர்கள் இன்னாருக்குக் கொடுக்க வேண்டும், இன்னாருக்குக் கொடுக்கக் கூடாது என்கிற பாகுபாடு வைத்துக் கொண்டு செயல் படுவதாகச் சொல்ல முடியாது—தெரியாது.

● மணிக்கொடி அளவுக்கு உங்கள் 'தேனீ' இதழ் தரமாக இருக்கவில்லை என்றொரு கருத்து நிலவுகிறதே...அதைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

⊖ மணிக்கொடி எழுத்தாளர்களில் எஞ்சி இருப்பவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் தேனீ ஆரம்பித்தேன் — இது ஒரு நோக்கம். தரமான எழுத்தாளர்களைத் தேடி அவர்களுக்கும் இடம் தர வேண்டும் என்பது இன்னொரு நோக்கம். இரண்டு நோக்கமுமே எனக்குப் பெரிய வெற்றி என்று சொல்ல முடியாது. முக்கிய காரணம், இந்த மணிக்கொடி கோஷ்டியைச் சேர்ந்த எல்லோருக்குமே ஏதோ மறப்புத் தன்மை வந்து விட்டாற் போன்ற எண்ணம் எனக்கு இப்போதும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது.

பிச்சமூர்த்தியை எழுதிக் கொண்டே இருக்கச் சொன்னேன். அவர், இரண்டு கவிதைகள் மட்டுமே எழுதினார். அந்த இரண்டு கவிதைகளும் அவருடைய மற்ற கவிதைகளோடு ஒப்பிடும் போது சாதாரண கவிதைகள் தான். க.நா.சு, 'ஜாதி முத்து' என்றொரு தொடர் கதை எழுதினார்—நல்ல தொடர் அது. அதை அவர் நடுவிலேயே விட்டு விட்டார். அதற்குக் காரணமெல்லாம் இப்போது பேசிக் கொண்டிருக்க வேண்டாம். சிதம்பர சுப்பிரமணியம் ஒரே ஒரு சிறு கதை மட்டுமே எழுதினார். அவரும்

படிப்பகம்

padippakam

மணிக் கொடி அளவுக்கு எழுத வில்லை. சிட்டி ஒரே ஒரு கதை எழுதினார். கு.ப.ரா. இல்லை. புதுமைப் பித்தன் இறந்து விட்டார்.

● நீங்கள் 'தேனீ' ஆரம்பிக்கும் போது புதுமைப் பித்தன் உயிரோடுதானே இருந்தார்?

○ ஆமாம்! தேனீ ஆரம்பித்த போது எல்லோருக்கும் கடிதம் எழுதினோம். புதுமைப்பித்தன் விலாசம் தெரிய வில்லை. ஏதோ வதந்தியைப் போல, பாகவதருடைய படத்துக்கு வசனம் எழுத புனாவிற்கு போய் இருக்கிறார் என்றுகேள்வி பட்டு ஜானகிராமனும் நானும் பம்பாய்க்குப் போகிற வழியிலே புனாவிலே இறங்கினோம். அங்குதான் ஜானகிராமனின் மாமனார் பட்டாளத்திலே கேப்டன் வேலையில் இருந்தார். அவர் வீட்டிலே தங்கிக்கொண்டு புதுமைப்பித்தனைத் தேடிப் போனோம். அங்கு, ''திருவனந்தபுரத்துக்கு போய் இரண்டு நாள் ஆகிறது. சேனிடோரியத்திலே சேர்ந்து கொள்ளப் போய் இருக்கிறார். அவருக்கு முற்றிய டி.பி. நோய்'' என்று சொன்னார்கள். அந்தமுகவரியும்சரியாகத் தெரிய வில்லை. தேனீ இரண்டாவது இதழ் வரும்போதே அவர் காலமாகி விட்டார் என்கிற தகவல் வந்தது. அவருக்கு அவ்வளவு சீரியஸாக வியாதிஇருக்குமென்று அப்போது எனக்குத் தெரியாது. ரொம்ப கஷ்டப்பட்டு செத்தார் என்று செய்தி வந்தது. விசயம் தெரிந்திருந்தால், நான் பெரிய உதவியாக இல்லாவிட்டாலும், சின்ன உதவியாவது செய்திருப்பேன். இல்லே, முடியலே. இது காலம் கடந்த பேச்சு—பின் நினைவு.

● புதுமைப் பித்தனை அவரது கடைசி காலம் வரை சந்தித்ததே கிடையாதா?

○ அந்த வாய்ப்பே இல்லை. அப்போது நான் இளைஞன். அவர்களெல்லாம்என்னைவிட வயதானவர்கள். என்னுடைய சுபாவம், நானே போய் எல்லோரிடமும் பேசுகிற குணம் இல்லை. பல தடவை நான் மெட்ராஸ் போன போதுகூட பி.எஸ். ராமையா, கி.ரா.,புதுமைப்பித்தன்போன்ற யாரையும் சந்தித்ததே கிடையாது. 1960-களில்தான் அவர்களைச் சந்தித்தேன். 48-களில் சில பேரைச் சந்தித்தேன். தேனீ நடத்தும்போது க.நா.சு. வருவார்.ஜானகிராமனும் கரிச்சான் குஞ்சுவும் என்னோடு இருந்தார்கள்.

தேனீயினால் இலக்கியத்துக்கு ஏற்பட்ட பெரிய நன்மை என்னவென்றால், ஜானகிராமனுக்கு இலக்கிய அந்தஸ்து கொடுத்த பல கதைகள் அதிலே வந்திருந்தது. முதல் இதழிலே அவருடைய சிறு கதை 'ரத்தப்பூ' என்கிற பெயரில் எழுதினார். அந்தக்கதை வெளிவந்த உடனே, இங்கே ஒரு இலக்கிய படைப்பாளிஇருக்கிறார் என்கிற எண்ணத்தை உண்டாக்கியது.

க.நா.சு. அதற்கு முன்பே எழுதிக் கொண்டிருந்தாலும் தேனீயில் எழுதியபோதுதான்இலக்கிய அந்தஸ்து உண்டாயிற்று. எழுதாமல் இருந்த மௌனியை எழுத வைத்தேன். இதெல்லாம், இலக்கிய வளர்ச்சியில் ஒரு பங்கு இல்லை என்று சொல்ல முடியுமா? மணிக்கொடி அளவுக்கு வர வேண்டும் என்றால், அவர்கள் தொடர்ந்து எழுதி இருக்க வேண்டும்.லா.ச.ரா., சாமிநாத ஆத்ரேயன், வல்லிக்கண்ணன் இவர்களெல்லாம் தேனீக்கு நிறைய Contribute பண்ணி இருக்கிறார்கள். என்னுடைய contribution ரொம்ப குறைவு. என்னிடம் தேனீயின் எல்லா

படிப்பகம்

padippakam

பொறுப்புகளும் இருந்ததால் நான் அதிகமாக எழுத முடிய வில்லை.

தேனீ, மணிக்கொடி அளவுக்குச் செய்தது என்று சொல்ல முடியா விட்டால்கூட மணிக்கொடிக்கு குறைவாக செய்துவிட்டாற் போல் எனக்குத் தோன்றவில்லை மணிக்கொடியில் வந்த கதைகள் அனைத்தும் 'ரத்னம்' என்று சொல்லமுடியாதல்லவா? அதிலே யும் புதுமைப்பித்தன் போன்ற வர்கள் எழுதி இருந்தாலும்கூட சில கதைகள் சோர்வாகத்தான் இருக்கும். அவருடைய மிகப் பிர பலமான 'துன்பக்கேணி'யில் செத்துப் போன மாதிரி முதலில் எழுதிவிட்டு, பிறகு உயிரோடு நடமாடுவது போல தப்பாக எழுதிவிட்டார். இதெல்லாம் நடக்கக் கூடியதுதான். தமிழ் நாட்டில் இலக்கியப் பத்திரிகை நடத்துவது அந்தக் காலத்தில் ரொம்ப கடினமான வேலை. இப் பொழுது இளம் எழுத்தாளர்கள் ரொம்பவும் கடுமையாக எழுது பவர்கள் அதிகம் பேர் இருக் கிறார்கள். யாராவது ஒருவர் இல்லாவிட்டால் இன்னொருவர் எழுதிவிடுவார்கள். அப்போது அப்படி இல்லை. அதனால், ஒரே மாதிரியான தரத்தை எதிர் பார்க்க முடியவில்லை. கடைசி யில் நானே அலுத்துப்போய் எல் லோருக்கும் இடம் கொடுக்க ஆரம்பித்துவிட்டேன். பத்திரிகை நடத்தணும், படைப்பு வரும் போது போடுவோம் என்கிற தினுசுக்கு நான் வந்தாச்சு.

● அரும்புக்கு பரிசு கிடைத்தால் நீங்கள் சந்தோசப்பட்டிருப்பீர் கள். ஏனென்றால், உங்கள் Master Piece அதுதான் என்று கூறுகிறீர்கள். ஆனால் இப்போது காதுகளுக்கு கிடைத்திருக்கிறது. இது ஒரு மாறுபட்ட விஷயம். காதுகள் பற்றிகூட புரியவில்லை என்று பொதுவான அபிப்ராய இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் இதைஎல்லாம்எப்படி நம்புவது என்று பலர் கஷ்டப் படுகிறார்கள். அதைப்பற்றி உங் கள் கருத்து என்ன?

○ அதாவது, 25 வருடங்களுக்கு முன்பு எனக்கு 25 வயது குறைவு இல்லையா? அப்போது, அரும் புக்கு விருதுகொடுப்பதாக கூறிய தால் அதுபற்றிப் பேசினேன். எனக்கு இப்போதும்கூட அரும்பு உத்தியிலும் சரி, மனோவியல் ஆய்விலும் சரி—அதில் ஆழ்ந்து போய் இருக்கிறேன் என்கிற எண்ணம் இருக்கிறது. அதை, காதுகளுக்குக்கொடுக்கக்கூடாது என்று நீங்களே ஏன் அர்த்தம் செய்து கொள்கிறீர்கள் என்று தெரியவில்லை. காதுகள் புரிய வில்லை, நம்பமுடியவில்லை... எதற்காகநம்பவேண்டும்? காக்கா பேசியது என்றால், காக்கா பேசியதாகவே நம்பவேண்டுமா? அது எழுத்தாளனுடைய கதை. அதை நடந்தது என்று சொல் கிறான். நடந்தது என்பதை நம் பாவிட்டால், கற்பனை என்று வைத்து அதைச் சரியாகச் செய்தி ருக்கிறானா இந்த எழுத்தாளன் என்று பார்க்கலாம். புரியவில்லை என்று சொல்பவர்கள் பத்து தடவை படிக்கவேண்டியதுதான் பத்துதடவை படிக்கப்பொறுமை இல்லை என்றால் பேசாமல் போட்டுவிட வேண்டியதுதான். படிக்கும்போதே, காதிலே சப்தம் கேட்கிறது—பயமாய் இருக்கிறது என்று பலபேர் சொல்லக் கேட்டி ருக்கிறேன். அது எனக்கு வெற்றி தான். ஆனால், புரியவில்லை என்றால்... என்ன புரியவில்லை?

● அரும்பு நாவலில் நிறைய Characterisation இருக்கிறது. காதுகளில் ஒரே ஒரு சுதாபாத் திரம் தான். மற்ற பாத்திரங்கள் புகை படிந்தாற்போல் இருக் கின்றன. நீங்கள் கொண்டு வந்து

படிப்பகம்

padippakam

காட்டக்கூடியஅபூர்வமான சக்திகள் அல்லது தீய சக்திகள், நல்ல சக்திகள் எல்லாமே நடப்பு உலகத்தில் எப்படிஇருக்கிறதோ, அதே மாதிரி நிழல் போல் இருக்கின்றன. அதை நீங்கள் ஏன் இன்னும் prominent - ஆக கொண்டுவரக்கூடாது. கொண்டு வந்தால்நம்பமாட்டார்கள்என்று கவலைப் படுவது மாதிரி இருக்கிறது. ஒரு இடத்தில், ''அப்படி நான் எல்லாவற்றையும் எழுதினால் யாருமே நம்பமாட்டார்கள். தூக்கிப் போட்டு விடுவார்கள்'' என்று அச்சப்படுவது மாதிரியும் எழுதியிருக்கிறீர்களே?

○ நீங்கள் கேட்பதற்கான பதிலை ஆரம்பத்திலிருந்தே சொல்ல வேண்டுமானால், ஒரு நாவல் போல, இன்னொரு நாவல்; ஒரு சிறுகதை போல இன்னொரு சிறுகதை இருக்கக் கூடாது என்று நினைப்பவன் நான். முதலில் நித்யகன்னி, பிறகு—வேள்வித்தீ, உயிர் யாத்திரை, இருட்டு இப்படி எடுத்துக் கொண்டால் ஒரு நாவலுக்கும், மற்றொரு நாவலுக்குமான விஷயமே மாறுபட்டிருக்கும். வேண்டுமென்று தெரிந்தே செய்தது.

மற்றவர்களைப் போல, நான் பிறந்த ஜாதியைபற்றியே- நெசவாளர்கள் பிரச்னை பற்றியே எழுதிக் கொண்டிருக்கலாம். அதில் எனக்கு விருப்பம் கிடையாது.

● உங்களைப் போலவே ஒரு படைப்புக்கும், மற்றொரு படைபுக்கும் முழுமையாக மாறுபட்டு எழுதக்கூடிய- எழுதிய- எழுதிக் கொண்டிருக்கிற தமிழ்ப்படைப்பாளியாக யாரையாவது சொல்ல முடியுமா?

○ முதலில்,இப்படி புதுமையைச் செய்து காண்பித்தவர் புதுமைப் பித்தன். பிறகு பிச்சமூர்த்தி. கு.ப.ரா. அப்படிச் செய்யவல்லவர்; செய்திருப்பார்—அதற்குள் காலமாகி விட்டார். ஆனால், புதுமைப்பித்தன்தான் எல்லோரையும் விட, பலவிதப் பிரச்னைகளைக் கையாண்டு எழுதினார். அவருக்கும்மாறுபட்டுநான்எழுதி இருக்கிறேன் என்கிறேன். அவர் திருநெல்வேலி சைவ வேளாளர் பிரச்னைகளை எழுதுவது என்று ஒரு வரையறை வைத்திருந்தார். நான் அத்தோடு நிற்காமல், எனக்குத் தெரிந்த பலவித விஷயங்களைப் பற்றி எழுத வேண்டும் என்ற எண்ணம் உள்ளவன்.

என்னுடைய இலக்கியக் கண்ணோட்டத்தை மூன்று தினுசாக பிரித்துக் கொண்டேன். ஒன்று, உண்மையான வாழ்க்கையைக் கொஞ்சம் கூடக் கற்பனையே இல்லாமல் அப்படியே எழுதுவது—News கொடுப்பது போல. ஆனால் அதில் கலைத்தன்மையைக் காண்பிக்க வேண்டும். அந்த வகையில்தான் பெட்கி, மாய்பாப் இதுமாதிரி கதைகள் இருக்கின்றன. ஒரு மாதிரியான Auto Biography கதைகள் இவைகள்.

ஓரளவு கற்பனை கலந்து வாழ்க்கையின் எதார்த்தங்களை எழுத வேண்டும் என்று சில கதைகள்—இது இரண்டாவது. மூன்றாவது, கற்பனையிலே எவ்வளவு உயரம் முடியுமோ அவ்வளவு fantastic-ஆக விரிவாகவும் உயரமாகவும் பறந்து உலகத்தைஎட்டிப்பார்க்க வேண்டும் என்கிற தினுசிலும் சில கதைகள் எழுத நினைத்தேன். அதற்காகத்தான் மகாபாரதக் கதைகளை நான் உபயோகப் படுத்திக் கொண்டேன். என்னுடைய கண்ணோட்டம் இது தான். அரும்பு, பாத்திரப் படைப்புகளுக்காக எழுதப்பட்ட கதை. பாத்திரப் படைப்பு

படிப்பகம்

padippakam

என்றால் சும்மா கோடு போட்டு எழுவது அல்ல. உளவியல் நேர்கோடு எழுத வேண்டும் என்பதற்காக எழுதப்பட்ட கதை அது. அப்போது நிறைய நேரமும் இருந்தது எழுது வதற்கு. சுதேசமித்திரன் என்னை தாய் வீடு மாதிரி ஆதரித்து நான் எழுதியதை அப்படியே பிரசுரித்தார்கள். அதனாலே என் இஷ்டத்துக்கு ஒவ்வொரு பாத்திரத்தையும் உளவியல் நோக்தோடு எழுத முடிந்தது. இந்தக் கட்டமெல்லாம் கடந்து காதுகள் முற்றிலும் மாறுபட்ட Subject. ஒரு முறை, கலை மகள் ஆசிரியர் கி.வ. ஜகந்நாத ஐயர் என்னை ஒரு ஆந்திர எழுத்தாளரிடம் அறிமுகப் படுத்திய போது, ''வாசகர்கள் என்ன சொல்வார்கள், விமர்ச கர்கள் என்ன சொல்வார்கள் என்று கொஞ்சமும் கவலைப் படாத ஒரு எழுத்தாளர்'' என்று கூறினார். அது உண்மை. அவர் என்னை நன்றாகப்புரிந்து கொண்டுதான் சொல்லி இருக் கிறார். ஆனால், காதுகள் எழுதும் போது கொஞ்சம் தயங்கினேன். ஓரளவு பிராதத் தில் சொல்லப்பட்ட விஷயங்கள் போல சில அனுபவங்கள் எனக்கு ஏற்பட்டது. அதற்கு என்ன வேண்டுமானாலும் பெயர் சொல்லலாம். 'இலியூஷனரி' என்று சொல்லுங்கள். ஸ்ஷோப்ரினீக் டிஸிஸ்' என்று சொல்லுங்கள் ஏதாவது பெயர் சொன்னால் சரி. நடந்ததை நான் சொல்லணும்.

பல விஷயங்கள் அதில் சொல்லா மல் விட்டு விட்டேன். அதற்கு இரண்டு காரணம். ஒன்று, இது புராணம் என்ற அவநம்பிக்கை ஏற்பட்டு விடுமோ என்பது. இரண்டாவது, உடல் தளர்ந்து விட்டது. கை எழுத முடியாத நிலைக்கு வந்தாகி விட்டது. நடுக்கம் அதிகமாகி விட்டது. அதனால், காலத் தன்மையோடு அதைப் பூர்த்தி செய்தால் போதும் என்ற எண்ணத்தோடு முடிக்க வேண்டியதாயிற்று 'Visual and ordinary Hallucination'—தமிழில் ‍இதை யாரும் அதிகமாக எழுதியதாகத் தெரியவில்லை. அதில் புரியாத விஷயம் எதுவுமே இல்லை. Grimm tales—ல் எல்லா விதமான கதைகளும் வருகிறது. அதை நம்புகிறோமா? அது போல பாருங்களேன்?

● வறுமையை நீங்கள் வாழ்க்கையில் நிறைய அனு பவித்திருந்தாலும் கூட கதை களில் வறுமையைப் பற்றியோ, அதை எதிர்த்துப் போராடுவது பற்றியோ, அரசியல் விஷயங் களைப் பற்றியோ, நீங்கள் எழுத வில்லையே ஏன்? உதாரணமாக, காந்தி செத்துப் போனார். அப்போது, சோக மாகத்தேனியில் தலையங்கம் எழுதி இருந்தீர்கள். ஆனால், அது இலக்கியத்தின் பக்கம் வரவே இல்லை. ஆனால் வறுமைப் பற்றி பல கதைகளில் அபாரமாக எழுத முடிந்தது. இன்னும் சொல்லப் போனால், 'வயிறு பேசுகிறது' என்ற கதையில் மிகவும் அற்புதமாகச் செய்திருக்கிறீர்கள். ஆனால், அதற்குப் பிறகு எழுதிய எந்தக் கதையிலும் அந்தத் தாக்கத்தைத் காணவே முடிய வில்லை. சில சமயங்களில் நீங்கள் வறுமையில் இருந்ததைக் கூட மறுக்கிறீர்கள். அப்படி ஒன்றும் நான் வறுமையில் இல்லை— ஓரளவு நன்றாகத் தான் இருந்தேன் என்று கூடப் பேட்டி களில் சொல்லி இருக்கிறீர்களே.

○ வறுமையைப் பற்றி நான் எழுதவில்லை என்று எப்படி

படிப்பகம்

padippakam

சொல்ல முடியும். காதுகளைக் கூட 'வறுமையின் ஓலமாக இருக்கிறது' என்று லா.ச.ரா. எழுதி இருக்கிறார். அது போல, என்னைப் பொறுத்த வரையில் வறுமையோடு போராடுவது என்பதுதான் வாழ்க்கையாக் இருந்தது. அதில் சந்தேகமே இல்லை. நன்றாக, சௌகர்ய மான சுகத்தின் சிகரத்திலிருந்து வறுமையின் அதலபாதாளத்தில் விழுந்து பட்ட கஷ்டங்களை ஓரளவு காதுகளில் சொல்லி இருக்கிறேன். வயிறு பேசுகிறது, வரவும் செலவும் போன்ற சில கதைகளில், நெசவாளி குழந்தையை விற்க வேண்டிய நிலைமை இருந்தது. அதைப் பற்றிஎல்லாம்எழுதியிருக்கிறேன். அரசியல் பாதிப்பு இல்லை என்று எப்படி சொல்வது?

● அப்படிச் சொல்லவில்லை. ஆனால், அரசியல் பாதிப்பை பத்திரிகைகளில் தலையங்கம் மூலம் எழுதியிருக்கிறீர்கள். இலக்கியம் என்று வரும்போது அதை வடிகட்டி, அதற்கு இடமே கொடுக்காமல் எழுதி இருக்கிறீர்களே?

○ அரசியல் நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்தையும் பாதித்துக் கொண்டு தான் இருக்கிறது. என்னுடைய வாழ்க்கை உங்கள் வாழ்க்கையைப் போல் அமைய வில்லை. வினோதமான வாழ்க்கை. பிறரிடம் சொல் வதற்குப் பயப்படும்படியான வாழ்க்கை. வாழ்க்கையின் பெரும்பாலான நாட்கள் இந்தப் போராட்டத்திலேயே போய் விட்டது. எந்தப் போராட்டத் திலேயே? நான்பைத்தியக்காரன் என்று பேர் வாங்காமல் இருக்க வேண்டுமே— என்கிற போராட் டத்திலேயே. அந்த போராட் டம் பல ஆண்டுகள் நடந்தது. அந்த சமயத்தில் கூட நிறைய புத்தகங்கள் எழுதி விட்டேன். அரும்பு வேள்வித்தீ அப்போது தான் எழுதினேன். ஆறு குறு நாவல்களில் பெரும் பாலானவை அப்போதுதான்- அந்தக் குழப்பத்திலிருந்த நேரத் தில்தான் எழுதியது. குழப்பம்என் றால் எனக்குப் பின்னால் எந்த நேரத்திலேயும் பைத்தியம் பிடித்து விடுமோ—அதாவது பைத்தியம் பிடித்து விடுமோ என்பதன் அர்த்தம் 'நான்', என்கிற உணர்வு பிசகி விடுமோ என்கிற நிலை! இந்தப் போராட்டத்தை எனக்கு—என் ஆண்மைக்கு விடப்பட்ட சவாலாக— அறை கூவலாகத் தான் என் வாழ்க்கையை நடத்திக் கொண்டு வந்தேன். இது பற்றி யாரிடமும் நான் சொல்லியதில்லை. இந்த அனு பவம் ஆரம்பிக்கும் போது முதலில் சில நண்பர்களிடம் சொன்னேன். அவர்கள் என்னை 'ஒரு மாதிரி' பார்க்க ஆரம்பித் தார்கள். அப்புறம் தான் அப்படிச் சொல்வது தப்பு என்று உணர்ந்து திருத்திக் கொண்டு என் நெருக்கடிகளை எனக் குள்ளேயே வைத்துக் கொண் டேன். அந்த அனுபவமே மிகவும் பயங்கரமானது.

அப்படி ஒரு கஷ்டம் இருப்பதாக நீங்கள் கற்பனைகூட செய்து பார்க்க முடியாது. வறுமையை என்னுடைய சொந்த சவாலாக ஏற்று அதை எதிர்த்தும் போராடுகிற விதத்தில் தான் நான் வாழ்க்கையை நடத்தி வந்தேன். குடும்பமோ பெரி தாகி விட்டது. அதைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு...இந்தப்போராட்டத் திலேயே நான் வாழ்ந்து விட்டதால் அரசியல் பற்றிஎழுத வேண்டும் என்ற எண்ணம்

படிப்பகம்

padippakam

இருந்தாலும், எழுதுவதற்கு நேரமே இல்லை.

சுதந்திரம் கிடைக்கும் வரை இந்தியாவின் வறுமைநிலை உலகம் அறிந்த ஒரு விஷயம். இப்போது அது பற்றி எல்லோருமே ஓரளவு எழுதி இருக்கிறார்கள். பிறகு, அரசியல் காரணமாக இந்த வறுமை அதிகமாவதோ, குறைவதோ; ஏழை பணக்காரனாவதோ, பணக்காரன் ஏழையாவதோ, பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாவதோ, ஏழைகள் மிகவும் ஏழைகளாகிப் போவதோ... இதைப் பற்றி எல்லாம் நான் ஏன் எழுத வில்லை என்றால் வேறெந்த காரணமும் இல்லை. நான் என்னுடன் போராடுவதற்கே எனக்கு நேரம் சரியாக இருந்தது. என் புத்தியை தடுமாற்றம் இல்லாமல் ஒழுங்காக வைத்துக் கொள்வதற்கு மிகவும் சிரமப்பட்ட காலம். அதை ஜெயிப்பது தான் பெரிய போராட்டமாக இருந்ததே தவிர இன்னொருத்தருக்கு நான் என்ன சொல்வேன். இப்படி கஷ்டப்பட்டால் போராடு, விட்டுக் கொடுக்காதே, மேலும் மேலும்.... என்றுதான் சொல்வேன். 'சமூகம் செய்யும் கொடுமை இது' என்று சொல்லிக் கொண்டு நான் அரசியல்வாதி ஆகவில்லை.

1952, 53-ல் ஒரு கவுன்சில் தேர்தல் நடந்தது. நான் காங்கிரஸ்காரனாய்ப் போட்டியிட்டுத் தோற்றேன். எனக்குப் போட்ட ஓட்டுகளை எல்லாம் அள்ளி அவர்கள் பெட்டியில் போட்டுக் கொண்டார்கள். நான் சொல்வது பொய் இல்லை. இதற்கு எல்லோரும் உடந்தை. அப்படி ஒரு சம்பவம் நடந்த பிறகு அரசியல் வேண்டாம், அதாவது அரசியல் வேண்டாம் என்றால் அரசியல் நம்மை விட்டு ஓடிப் போய் விடப் போவதில்லை, அது எனக்குத் தெரியும். எந்தக் கட்சியிலும் சேருவதில்லை என்ற முடிவோடு இன்று வரை ஒதுங்கி இருந்து விட்டேன். ஒரு வேளை, கை சரியாக இருந்திருந்தால், இது பற்றியும் எழுதி இருப்பேனோ!

● 1942-ல் முதன் முதலாக நீங்கள் 'விடிவெள்ளி' என்றொரு பத்திரிகையை ஆரம்பிக்க இருந்ததாகவும், கு.ப.ரா. கேட்டுக் கொண்டதற்கிணங்க அம்முயற்சியைக் கைவிட்டதாகவும் அறிகிறோம். பிறகு, 1948-ல் மீண்டும் பத்திரிகை ஆரம்பித்த போது அதற்கு 'தேனீ' என்று பெயர் வைத்தீர்கள். இதற்கு விசேஷ காரணம் உண்டா?

○ இடையில், ஆறு ஆண்டுகள் இடைவெளி இருந்ததால் அந்தப் பெயர் மறந்தே போய்விட்டது. அப்போது இங்கிலாந்திலிருந்து ஜோசப் எடிசன் 'THE BEE' என்றொரு இதழை நடத்தி வந்தார். அந்த இதழின் பாதிப்பினால்தான 'தேனீ' என்று பெயரிட்டேன். அது மட்டுமல்லாமல், பல விதமான மலர்களிலிருந்து தேன் சேகரிக்கிற சுறுசுறுப்பான பிராணி தேனீ என்பதனாலும், அப்பெயரை வைத்தேன்.

● வேறு எந்த எழுத்தாளருக்கும் இல்லாத அனுபவங்கள் உள்ள நீங்கள் சுயசரிதை எழுதினால் என்ன? ஏனென்றால், உங்கள் அக அனுபவங்கள் இலக்கியத்தில் கால், அரைக்கால் பாகம்தான் வெளி வந்திருக்கிறது. இதை வேறு யாரும் எழுத முடியாது. பரிசு வாங்கப் போகும்போது கூட, இனி எதிர் காலத் திட்டம் என்பதில் நீங்கள்

படிப்பகம்

padippakam

இதைப் பற்றி சொல்ல வில்லையே?

○ என்னுடைய அனுபவத்தில் ஓரளவு கதைகளாகவும், குறு நாவல்களாகவும் வந்தாயிற்று. நாவல்களில் உயிர் யாத்திரை, இருட்டு, காதுகள் இவைகளெல்லாம் சுயசரிதையின் ஒரு பகுதி தானே. என் குடும்ப வாழ்க்கையைப் பற்றி குறுநாவல்களில் எழுதி இருக்கிறேன். இன்னும் விரிவாக எழுத வேண்டும் என்றால் என்னால் முடியும் என்று தோன்றவில்லை. குழந்தைப் பருவத்தைப்பற்றிஎழுதி ஆயிற்று மாய்பாப் குறுநாவலில் அம்மா, அப்பா பெயரை அப்படியே போட்டு எழுதி இருக்கிறேன். கதாபாத்திரத்தின் பெயரில் என்னை வைத்தே சொல்லி இருக்கிறேன். ஆனால் ஒரு விஷயம். 'நான்' என்று எழுதுவதெல்லாம் நான்தான் என்று நினைத்துக் கொள்கிறார்கள். ரொம்ப தப்பான கருத்து இது. ''எனக்கு பெண் ஆசை இருக்கிறது'' என்று பாத்திரம் சொன்னால், அது வெங்கட்ராமுக்கு இருக்கிற பெண்ணாசை என்று நீங்கள் நினைத்துக் கொள்வது தவறு.

இனிமேலும், எழுத வேண்டும் என்கிற ஆசை இல்லை; ஆத்திரம் இருக்கிறது! எனக்கு நிறைய ஆவல் இருக்கிறது. முடியவில்லையே! ஆக, ஓரளவு சுயசரிதம் சொல்லி ஆயிற்றுதான்.

● புரியாமல் எழுதுவது என்பது இப்போது ஒரு ஃபேஷனாகி வருகிறது. அல்லது புரியாமல் எழுதுவதுதான் சிறந்த எழுத்து என்றொரு அபிப்ராயம் பொதுவாக இலக்கிய நண்பர்களிடம் இருக்கிறது. சிறு பத்திரிகைகளில் எழுதப்படுகிற விஷயங்கள் அனைத்தும் புரியாமல் இருந்தால் தான் நல்லது என்பது மாதிரியான அபிப்பிராயமும் இருக்கிறது...இதுபற்றி நீங்கள்கருத்து சொல்ல முடியுமா?

○ சிறு பத்திரிகைகளாலே இலக்கியம் படைத்த பூமி இது. பெரிய பத்திரிகைகள் எதுவுமே மிகச் சிறந்த இலக்கியப் படைப்பாளி என்று கூறக்கூடிய ஒரு நபரை இதுவரையில் உற்பத்தி செய்ததாகத் தெரியவில்லை. மிகச் சிறந்த இலக்கியப் படைப்பாளி என்று சொல்லப்படுகிற சில பேர் பெரிய பத்திரிகைகளில் எழுதி இருக்கலாம். ஆனால், சிறிய பத்திரிகையினால்தான் வளர்ந்தார்கள். சில பேர் புரியாமல் எழுதுவது கெட்டிகாரத்தனம், அது சிறந்தகலைத்தன்மைஎன்று எழுதுபவர்கள் இருக்கலாம். அது போலவும் வரட்டுமே, வந்தால் என்ன? அது மாதிரி எழுதுபவர்களுக்கும் இடம் வேண்டியது தானே!

சிலருக்குப்புரியவில்லை என்பதற்காகஒரு படைப்பைத் தரக்குறைவானது என்று சொல்லிக் கொள்ள நான் தயாரில்லை. எவ்வளவு எளிமையாகச் சொன்னால்கூட சிலருக்கு சில விஷயங்கள் புரியாது.

புதுக்கவிதைகள் எதுவுமே என் மனதில் நிற்கவில்லை. அதை புதுக் கவிஞர்களுடைய தப்பு என்று நான் நினைக்கவில்லை. என்னுடைய தப்பு அது. எனக்கு ஆழ்ந்த கவனம் அதில் போகவில்லை. நான் சிறுகதை தொடர்கதை என்றால்கூட படிக்கிறேன். கவிதை என்றால் ஓரளவு மேம்போக்காகப் படித்து விடுகிறேன். அது என்னுடைய பலகீனமே தவிர, கவிதையின் பலகீனம் என்று சொல்ல முடியாதல்லவா!

படிப்பகம்

padippakam

மிகவும் கடினமான விஷயங்களைக்கூட எளிய நடையில் சொல்லி, எளியவர்களுக்கும் சொல்ல வேண்டும் என்பது தான் பாரதியார் காலத்திலிருந்து நாம் மேற்கொண்ட கொள்கை. பாரதியாருக்குப் பிறகு பாரதிதாசனும் அந்த முறையில்தான் எழுதினார். பழைய செந்தமிழ், பழந்தமிழ் கூடாது என்கிற விஷயத்தோடு எழுதினார். ஆனால், எல்லோருக்கும், எல்லா விஷயமும் புரிகிறதில்லையே!

● கலை கலைக்காகவே என்கிற சமூகப் பிரக்ஞை ரொம்ப வேண்டும் என்று இப்போது சொல்கிறார்கள். இந்தச் சமூகபிரக்ஞை ரொம்ப அவசியம் என்று நினைக்கிறீர்களா?

○ சமூகப் பிரக்ஞை இல்லாமல் எப்படி எழுத முடியும்?

● ஆனால், நீங்கள் சமூக பிரக்ஞை இல்லாமல், மக்கள் பிரச்னைகளை அணுகாமல் ஏதோ தெய்வீகமான, ஆத்மீகமான உயர்மட்டத்தரமான விஷயங்களை மட்டுமே அணுகிக் கொண்டிருப்பதாகச் சில எழுத்தாளர்கள் கூறுகிறார்களே?

○ சரி! சமூகப்பிரக்ஞை என்பதில் தெய்வீகம் பற்றி பேசுவதும் அடக்கம். நம்பாதவர்களுக்கு அது பழக்கமில்லை. நம்புகிறவனுக்கு சில நியமனங்கள் உண்டு.

தியானத்தில் உட்காருவது பற்றி சில அனுபவங்களைக் கதையாக எழுதினால், சமூகப் பிரக்ஞையோடு எழுதப்பட்ட கதை ஆகாதா? எப்போது பார்த்தாலும் பசியைப் பற்றியும், உப்பு பருப்பு விலை பற்றியும் பேசுவது தான் சமூகப் பிரக்ஞை என்று எழுதுவதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. உயர்ந்த சிந்தனைகள் சில பேருக்கு இருக்கிறது, அதைப் பற்றி கதை எழுதுகிறார்கள். உயர்ந்த சிந்தனை அவனுக்கு எப்படி வருகிறது? இப்போது சமூகத்தில் பொருளாதார மேடு, பள்ளங்கள் இல்லாமல் இருக்க வேண்டும் என்று நினைக்கும் எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். அதற்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டு எழுதுபவர்களும் இருக்கிறார்கள். அது தப்பான எழுத்து என்று சொல்ல நான் தயாராக இல்லை. அதுவும் ஒரு தேவையான எழுத்து தான்.

ஆனால், அதே மாதிரியாக ஒவ்வொருத்தரும் எழுத வேண்டும் என்று எப்படி சொல்ல முடியும்! எனக்கு உண்மையிலேயே, இப்போது உள்ளது போல், ஏழை பணக்காரன் என்கிற ஏற்ற இறக்கம் இல்லாமல் ஓரளவு சமனாக இருந்தால் நல்லது என்கிற எண்ணம் இருக்கிறது. அதற்காகத்தான், 1972-க்கு முன்பிருந்தே "நீங்கள் எந்த மாதிரியான சமூகத்தை எதிர்பார்க்கிறீர்கள்?" என்று கேட்டால், "God Oriented, Communist Pattern of society" என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். இதற்கான நூல்களை நான் இதுவரை எழுத வில்லை. முதலிலேயே சொல்லிவிட்டேன் நான் ஏன் எழுதவில்லை என்பதற்கான காரணத்தை.

சமூகத்தில் ஏழைகளின் எண்ணிக்கை அதிகமாகவும், பணக்காரர்களின் எண்ணிக்கை குறைவாகவும் இருப்பது மிக தவறு. அதனால் சமூகத்தில் அமைதி இருக்காது என்கிற எண்ணம் எனக்கு இருக்கிறது. ஆனால், இதைப் பற்றியே நான் எழுதிக் கொண்டிருக்க

படிப்பகம்

padippakam

வேண்டும், பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்று நீங்கள் என்னிடம் எதிர்பார்ப்பது எப்படி?

● உங்களை ''சமூகத்தில் நிலவுகிற அநீதிகளைக் கண்டிக்கிற தீவிரவாதி'' என்று நீங்களே ஒரு பேட்டியில் கூறி இருக்கிறீர்களே....?

○ பசியைக்கண்டித்திருக்கிறேன். நானே ஏழையாய் வறுமையோடு போராடிக் கொண்டிருக்கும் போது ஏழையைப் பற்றி எழுதி இருக்கிறீர்களா என்று கேட்டால் என்ன அர்த்தம்? என்னைப் பற்றி எழுதினாலே ஏழையைப் பற்றி எழுதியதாகத்தானே அர்த்தம்!

● வறுமையை 'சிறுமை' என்று கருதுகிறீர்களா?

○ நிச்சயம் மோசம் தான். அதுவும் குடும்பத்தோடு இருப்பவனுக்கு ரொம்ப கொடுமை அது. அதை காதுகள் நாவலில் அழுத்தம் திருத்தமாகச் சொல்லி இருக்கிறேன் நான். இதை விட அழுத்தம் திருத்தமாக வேறு எந்தக்கதையிலும் பேசவில்லை. சாமியாருக்கு, சன்னியாசிக்கு வீட்டைத் துறந்தவனுக்கு வறுமை தேவையாக இருக்கலாம். அவனுக்கு அடுத்த வேளையைப் பற்றி கவலை இல்லை. நம்மால் அப்படி முடியாது. அதோடு இந்த அரசியல் போக்கைப் பார்த்தால் மகா பயங்கரமாக இருக்கிறது. விலைவாசி ஏறிக் கொண்டே போகிறது.

எனக்கு 25 ஆயிரம் ரூபாய் விருதுக்காகபணம் வருகிறதுஎன்றால், கேட்க சுகமாகத் தான்இருக்கிறது. ஆனால்,இந்த ரூபாயை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும் என்று நினைக்கிறீர்கள். எத்தனை நாளைக்கு அதை வைத்துக் கொண்டு உயிரோடு இருக்க முடியும் என்று நினைக்கிறீர்கள். விலை ஏறி கொண்டே போகிறது, காபியிலிருந்து தபால்கார்டு வரை ஏறுகிறது. இந்த நிலையிலும் வறுமையைக் கண்டு பயப்பட வேண்டுமா என்றால் எப்படி?

அதுவும் 'மார்க் கெட்டிங்பேனல்' கொண்டு வரப் போகிறார்களாம். அது நமது பொருளாதரத்தை மட்டுமல்ல, ஏற்றத் தாழ்வுகளை இன்னும்அதிகமாக்கப்போகிறது.நிச்சயமாகமத்திய வர்க்க, என்னைப் போன்ற Lower middle class, வறுமைக் கோட்டுக்கு கீழே இருப்பவர்களுக்கு மிகவும் பயங்கரமாக இருக்கப் போகிறது.

● பதிப்பகங்கள், பத்திரிகையாசிரியர்கள், வெளியீட்டாளர்கள் கொடுக்கிற பணம் பற்றி அபிப்ராயம் சொல்ல முடியுமா? உங்களை ஏமாற்றியதுண்டா? பேர் சொல்ல வேண்டாம். ஏமாற்றி இருக்கிறார்களா?

○ (குமுறுகிறார்) வேண்டாம் அவர்களைச் சொல்லி என்ன பயன்? விட்டு விடுங்கள்.

● எழுதுபவர்களுக்கு இப்போது கொடுக்கிற Remunaration விவகாரத்தில் உங்களுடைய அபிப்ராயம் ஏதாவது இருக்கிறதா? உதாரணமாக, இந்தியாவிலேயே குமுதம். ஆனந்த விகடன் போன்ற பத்திரிகைகள் அதிகமான Remunaration கொடுத்தால்கூட தமிழ் நாட்டு எழுத்தாளர்கள் 'போதவில்லை' என்கிறார்களே?

○ தமிழ் நாட்டில் இலக்கியம் படைத்து சம்பாதித்து வாழ முடியாது என்பதைப் பலமுறை

படிப்பகம்

padippakam

தெளிவாகச் சொல்லி இருக்கிறேன். நான் கேள்விப் பட்ட படி விகடன்தான் இந்தியாவிலேயே அதிகமாக Remunaration கொடுக்கும் பத்திரிகை; அடுத்த படி குமுதம்!

இப்படிச் சில பத்திரிகைகள் கொடுக்கின்றன. இவர்கள் இலக்கியப் படைப்பாளிகளை ஆதரிக்கிறோம் என்று சொல்லி பத்திரிகை ஆரம்பிக்கவில்லை. ஏதோ ஒரு நோக்கத்தில் பத்திரிகை ஆரம்பித்து, அந்த நோக்கத்தோடு நடத்துகிறார்கள். என் பெயரிலே ஒரு மரியாதை இருக்கிறது என்றால், என் கதை ஒன்றைப் பிரசுரித்து மற்றவருக்கு கொடுப்பதை விட ஐம்பதோ நூறோ அதிகமாகக் கொடுத்து விடுகிறார்கள். இது வருடத்தில் ஒரு தடவை நடக்கலாம்! விகடனில் வாராவாரம் என் கதையைப் போடச் சொன்னால் போடுவார்களா? போட முடியாது.

● ஆனால், பி.எஸ் ராமையாவினுடைய 'சந்தைப் பேட்டை' தொடரைக் குமுதத்தில் தொடர்ந்து வெளியிட்டார்களே?

○ பி எஸ். ராமையாவினுடைய ஆளுமை-Personality அது. ஒவ்வொரு வாரமும் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு வெளியிட்டார்கள். அவருக்குச் செல்வாக்கு இருந்தது. எஸ் எஸ். வாசன் அவருக்கு வேண்டியவர் 'எழுது' என்று அவரை உற்சாகப் படுத்தினார். உடனுக்குடன் பணமும் கொடுத்தார்கள். அவரைப் போல் என்னால் வாராவாரம் எழுத முடியாது. அப்படி எழுதினாலும் அவர்கள் வெளியிடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

இலக்கியத்தை சிறு பத்திரிகையாளர்கள்தான் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே, பணத்தைப் பற்றிய பேச்சே கிடையாது. நான் கூட வேடிக்கையாகச் சொன்னேன், 57 ஆண்டுகளாக எழுதிக் கொண்டிருக்கிறேன், 57 ஆயிரம் சம்பாதித்திருக்கிறேன்' என்று. மணிக்கொடியில் என்ன பணமா கொடுத்தார்கள்? சிறு பத்திரிகையிலிருந்து பணம் வராது. நம்மைக் கேட்காமல் இருந்தால் போதாதா? அதனால், இலக்கியப் படைப்பைத் தொழிலாகவோ, வருவாய் தரும் ஒரு சாதனமாகவோ நாம் தமிழ் நாட்டில் கருத முடியாது.

● எழுத்தாளர்களுக்கு ஏதாவது கொடுக்க வேண்டும் என்கிற எண்ணம் உண்டா?

○ நிறையவே உண்டு. நான் கொடுத்திருக்கிறேன். தேனீயில் எழுதிய ஒவ்வொரு எழுத்தாளருக்கும் நான் பணம் அனுப்பி வைத்திருக்கிறேன். அப்படித் தொடர்ந்து கொடுக்க முடியாது என்கிற சூழ்நிலையில்தான் பத்திரிகை நடத்துவதை நிறுத்தி வைத்தேன். எழுத்தாளனுக்கு சமூகத்தில் டாக்டருக்கு, இன்ஜினியருக்கு வக்கீலுக்கு இருக்கிற மரியாதை கிடையாது. என்ன காரணமென்றால், அவன் சம்பாதிக்க முடியாதவன் என்கிற அர்த்தம் எல்லோருக்கும் புரிந்து போய் விட்டது. பெயர் வரும் பத்திரிகையில். 'நல்ல பெரிய ஆள்' என்று சொல்வார்கள். ஆனால், பைசா வராது என்று எல்லோருக்கும் தெரிந்து விட்டது. பணம் சம்பாதிக்க முடியாதவனை இந்தச் சமுதாயம் கேலி செய்யாமல் வேறு என்ன செய்யும்? எழுத்தாளர்களின் நிலையை உயர்த்தி ஆக

படிப்பகம்

padippakam

வேண்டும் என்று நான் ஆசைப் படுகிறேன். அந்த ஆசை எப்போது நிறைவேறும் என்று பார்க்க வேண்டும்.

○ 'பாலம்' பத்திரிகையில் நீங்கள் கௌரவ ஆசிரியராக இருந்திருக்கிறீர்கள். அந்த இதழில் தான் 'காதுகள்' எழுதினீர்கள். அதற்குப் பிறகு பதிமூன்று ஆண்டு காலம் எழுதாமலேயே இருந்தீர்கள்....

○ நான் எங்கே எழுதாமல் இருந்தேன்? 86-ல் குமுதத்தில் 'நானும் உன்னோடு தான்' குறு நாவல் எழுதினேனே 'என் இலக்கிய நண்பர்கள்' 92-ல் எழுதியது தானே?

● இருந்தாலும், அந்த 13 வருடங்களும் அஞ்ஞான வாசம் தானே?

○ பணம் வருகிற நம்பிக்கை இருந்தால் எழுதலாம். என் இலக்கிய நண்பர்களைக் கூட ஆனந்த விகடனுக்குத் தான் அனுப்பினேன் என்றாலும், என்னுடைய தரத்தை நான் குறைத்துக் கொள்ள வில்லை கஷ்டப்பட்டு எழுதுகிற நமக்கு தினசரி பணம் தேவைப்படு கிறதே என்று குமுதத்துக்கு அனுப்புகிறேன். அவர்கள் வெளி யிடுகிறார்கள். பணம் அனுப்பு கிறார்கள். இன்னமும் நான் தேவையில்தான் இருக்கிறேன். இது உண்மை. நான் வேஷம் போட விரும்ப வில்லை. நிராயுதபாணியாக எழுத மனம் வரவில்லை — இதுதான் காரணம். சிறு பத்திரிகைகளுக்கு எழுதலாம். எழுதி... அப்புறம் என்ன செய்வது? சிறு பத்திரிகை களில் போட்டு கௌரவம் செய் வீர்கள். கௌரவம் உலையேற்ற பயன்பட வில்லை. இது பற்றி எல்லாம் நிறைய தமிழ் நாட்டில் பேசி ஆயிற்று புதுமைப் பித்தன் நோய்வாய்ப்பட்டு செத்தார். கு. ப. ரா. செத்ததை நான் கூட இருந்து பார்த்தேன். பிச்ச மூர்த்தி, 'நான் சாவதற்கு மெட்ராஸ்' போகிறேன்' என்று சொல்லி விட்டு போனார்.

இவர்களெல்லாம் எவ்வளவு கஷ்டப்பட்டு செத்தார்கள் என்பது தெரியும். அந்த நிலைமைக்கு என்னை நான் ஆளாக்கிக் கொள்ள தயாராக இல்லை.

● பணம் கிடைக்கவில்லை, மனக் கஷ்டம், எழுத முடியவில்லை— இந்த நிலையில் ஆன்மீகம் உங்களைத் திடப்படுத்தி இருக்க வேண்டுமே?

○ சமீபத்தில் என் உடலைப் பரி சோதித்த டாக்டர், ''இந்த வயதிலும் உங்கள் உடம்பை நன்றாகத்தான் வைத்திருக் கிறீர்கள்''—என்று கூறினார். இந்த மனோதைரியம் ஆன்மீக தேட்டத்தினால் ஏற்பட்ட தைரியமாக இருக்கலாம். இந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இதை நீங்கள் நம்பலாம், நம்பாமலும் போகலாம்.

● க.நா.சு, சாகித்ய அகாதமி பரிசு வாங்கிய அன்று, மேடை யில் பேசும்போது, ''சாகித்யமும் இல்லை, அகாதமியும் இல்லை. இந்த சாகித்ய அகாதமியிலே'' என்று சொன்னார். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

○ அவர் சொன்னது அவ்வளவு சரி என்று நான் நினைக்க வில்லை. வல்லிக்கண்ணன், பி.எஸ். ராமையா, க.நா.சு., ஜானகிராமன் இப்படி கொடுத் திருக்கிறார்கள். கு.ப.ரா : புதுமைப்பித்தன் காலத்தில் சாகித்ய அகாதமி கிடையாது, அப்படி இருந்திருந்தால் அவர் களுக்கும் கிடைத்திருக்கலாம்.

● அதே காலத்தில், சென்னை ராஜதானி இலக்கிய விருது

படிப்பகம்

padippakam

மலையாள எழுத்தாளர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். தமிழ் எழுத்தாளர்களுக்கு வழங்கி இருக்கலாமே?

○ ஏன் அப்படி நடந்தது என்று எனக்கேத் தெரியவில்லை. யார் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறார்களோஅவர்களைக் கேட்க வேண்டிய கேள்வி இது.

● உங்களுக்கு 'ராஜராஜன் விருது' முதல் ஆண்டிலேயே வழங்கப்பட இருந்ததாகக் கூறப்படுகிறதே?

○ அதுவும், சாகித்ய அகாதமி போலத் தான்! ஒரு பேராசியர் என் வீட்டுக்கு வந்து துணை வேந்தர் கூப்பிட்டதாகச் சொல்லி, ராஜராஜன் விருது முதலாம் ஆண்டு எனக்குக் கொடுப்பதாக, சும்மா இருந்த என்னை அழைத்துப் போனார்கள்.

எனக்கு விருந்தும் கொடுத்து விட்டார்கள். துணை வேந்தரிடமிருந்து ''உங்களுக்குத்தான் விருது'' என்ற வார்த்தை வரா விட்டாலும், அருகில் அமர்ந்திருந்தவரிடம் என்னைக் காட்டி, ''பக்கத்தில் இருப்பவர் தான் விருது வாங்க இருப்பவர், இந்த (தஞ்சை) மாவட்டத்துக் காரர்'' என்று கூறினார்.

ஆனால், ஒரு மாதத்தில் விருது வேறு ஒருவருக்கு வழங்கப்பட்டு விட்டது. இதைப் பற்றி நான் என்ன சொல்வது? சும்மா இருந்தவனை அழைத்து ''நீங்க பெரிய ஆளுங்க'' என்று கூறி தலையில் ஒரு தட்டுத்தட்டி அனுப்பிய மாதிரி தான் இருந்தது. இதற்கு அரசியல்தான் காரணம் என்கிறார்கள். நான் எப்படி நிரூபிக்க முடியும்?

● உங்களுக்கு அடுத்தப்பிறவி மீது நம்பிக்கை இருந்தால், எப்படி வாழ விரும்புவீர்கள்?

○ வேண்டாம். இனி எந்தப் பிறவியும் எனக்கு வேண்டாம். இந்தப் பிறவியில் அனுபவித்தது போதும். இந்தக் கஷ்டத்தையும் வேதனையையும் அனுபவிக்க இன்னும் ஒரு பிறவி எதற்கு? வேண்டவே வேண்டாம்.

சந்திப்பு:
(கும்பகோணத்தில்)
தஞ்சை பிரகாஷ்
சூரியசந்திரன்

தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தில் வீரய்யர்—சீதை அம்மாளுக்கு 18-5-1920-ல் பிறந்த எம்.வி. வெங்கட்ராம், அவர்தம் ஐந்தாம் வயதில் தாய்மாமன் வெங்கடாசலம்—சரஸ்வதிக்கு தத்துப் பிள்ளையானார்.

எட்டாம் வகுப்பு படிக்கும் போதே எழுத தொடங்கி விட்ட இவரின் முதல் சிறுகதை 'சிட்டுக் குருவி, மணிக் கொடியில் வெளியாயிற்று. அப்போது அவர் குடந்தை கல்லூரியில் பி.ஏ. பொருளியல் படித்துக் கொண்டிருந்தார். ந.பிச்சமூர்த்தி, கு.ப.ரா. போன்றவர்களின் ஊக்குவிப்பினால் இலக்கியத்தில் ஆழ்ந்த கவனம் செலுத்தினார். முழு நேர எழுத்துப் பணியை ஏற்றார்.

கிராம ஊழியன், சுதேசமித்திரன், கலாமோகினி, பாலம், கலைமகள் போன்ற பல இலக்கிய பத்திரிகைகளும், குமுதம், ஆனந்த விகடன் போன்ற பல வெகுஜன பத்திரிகைகளும் இவர் படைப்பை வெளியிட்டுள்ளன. 200-க்கும் மேற்பட்ட எம்.வி.வி.யின் நூல்களில் சில நாவல்கள், குறு நாவல்கள், சிறுகதைகள், கட்டுரை

படிப்பகம்

padippakam

கள், கவிதைகள் என சில தொகுக்கப்பட்டுள்ளன. இலக்கிய படைப்புகளன்றி பொது அறிவு நூல்கள் சிலவும், 'நாட்டுக்கு உழைத்த நல்லவர்கள்'' என்ற தலைப்பில் அறிஞர்கள் பற்றிய 50 நூல்களையும் எழுதி இருக்கிறார்.

ஆங்கிலத்திலிருந்தும், இந்தியிலிருந்தும் ஏராளமான நூல்களையும் மொழி பெயர்த்துள்ளார். பாமிதத் எழுதிய 'இன்றைய இந்தியா' என்ற அருமையான நூலும் இதில் அடங்கும். ●

பெட்டிச் செய்தி

☐
வாக்குப் பெட்டி
அரசைத் தீர்மானிக்கும்:
அம்பேத்கார் வரைவு.
பணப்பெட்டியே தீர்மானிப்பது
நடை முறை.

☐
ஒலிம்பிக்கில் தங்கம் வெல்ல
ஒரு வழி பிறந்துவிட்டது.
இதோ வந்துவிட்டார்
இந்தியாவின்
மாபெரும் வெயிட் லிப்டர்
அர்சத் மேத்தா.

☐
கட்டிக்கொடுத்த
பெண்ணுடன் அனுப்பும்
புதுப்பாய் - பெட்டி
நாம் அறிந்த
ஒரே பெட்டி
இவர்களுக்கோ
பெட்டியில்லாத நாள்
வெட்டி நாள்.

☐
கள்ளத்தனங்கள்
பெட்டியில் வரும்.
ஆளும் வர்க்கக்
கர்ண பரம்பரை.

☐
பெயரிலேயே செய்தி:
வி.ஐ.பி சூட் கேஸ்.

☐
புத்தகம் கைக்கு அணி—
பழமொழி
பெட்டியே கைக்கு அணி-நிசம்.

☐
தக்கார் தகவிலர் என்பது
பெட்டியால் காணப்படும்.

☐
மூடியிருக்கிறது பெட்டி.
மூட இயலவில்லை
உடைமையாளர்/
கள்வர்
கண்

☐
சாவி தொலைந்துவிட்டது.
கருமிக்கு மகிழ்ச்சி.

☐
எப்படியோ
இந்தியாவில்
சூட்கேஸ் உற்பத்தியாவது
பெருகினால் சரிதான்.

☐
பெட்டிகள் நிரம்புகின்றன
இந்தியா காலியாகிறது

☐
எத்தனை பெட்டிகள்
அடுக்கினர் வாழ்வில்!
கடைசியில் இறங்கியது
சவப்பெட்டி.

☐
நமக்கு ஒன்று
புரிய வில்லை
அதெப்படி
பெட்டிச் செய்தியெல்லாம்
தலைப்புச் செய்தியாகிறது!

☐ **நீலமணி**

படிப்பகம்

padippakam

'சாரதா' விற்பனையாளர்கள்:

- ★ மூன்றில்.28, இரண்டாவது தளம், சாந்தி காம்ப்ளக்ஸ், 26, ரங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை - 600 017
- ★ சவுத் ஏஷியன் புக்ஸ், 6, தாயார் சாகிப் தெரு, 2-வது சந்து, சென்னை - 2
- ★ டி. திலீப்குமார், 25 மூன்றாவது டிரஸ்ட் கிராஸ் தெரு, மந்தைவெளி, சென்னை - 28
- ★ காந்தளகம், 4. முதல்மாடி, ராகிசா கட்டிடம், 834, அண்ணா சாலை, சென்னை - 2
- ★ எம். ராஜசேகர், 65, வி.எம், தெரு, ராயப்பேட்டை சென்னை - 14
- ★ சிலிக்குயில் புத்தகப் பயணம், 7, டாக்டர் பெசன்ட்சாலை, கும்பகோணம் - 612 001
- ★ விஜயா பதிப்பகம், 20, ராஜவீதி, கோயமுத்தூர் - 641 001,
- ★ வேர்கள் 12டி, தந்தை பெரியார் சாலை வட்டம் 7, நெய்வேலி - 607 803

பதிப்பக நூல்கள், வார, மாத, சிற்றிதழ்கள் மற்றும்... ஜாப் வகையறாக்கள் சிறந்த முறையில் குறித்த நேரத்தில் அச்சிட்டுத் தரப்படும்

தினுக்கு ஆர்ட் பிரிண்டர்ஸ்,
79/1, சடையப்பா லேன்,
சைதாப்பேட்டை,
சென்னை - 15.

படிப்பகம்

padippakam

SARADA Tamil Monthly Feburary 94
REGN. No : TNMS(S) 588
RNI No. 53767/93
R. Dls No : 1690/93

ஆசிரியர், உரிமையாளர்,
அச்சிட்டு வெளியிடுபவர்,
கோ. பாஸ்கரன்
தீனுக்கு ஆர்ட் பிரிண்டர்ஸ்,
79/, சடையப்பா லேன்
சைதாப்பேட்டை,
சென்னை - 15.
போன்: 4850367

அடைதல்

படிப்பகம்